வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com    மலர் : 05    03.08.2024 சனிக்கிழமை    இதழ் : 216    பக்கங்கள் : 12

# தமிழர் இனப்பிரச்னை விரைவில் தீர்க்கப்படும்

## யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி உறுதி



யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 03

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட மாகாண மக்கள் நீண்ட கால மாக பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்ற போதிலும், அந்த மாகாணத்தில் பாரிய பொருளாதார திறன் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அந்த சந்தர்ப்பங்களைப் வடக்கு மாகாணம் உட்பட முழு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக பயன்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். 11



## பொன்சேகா - அமெ. தூதுவர் கொழும்பில் திடீர் சந்திப்பு!

கொழும்பு, ஓக. 03

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் ஜூலி சங்கிற்கும் இடையிலான சந்திப்பு ஒன்று கொழும்பில் நேற்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பு தொடர்பில் அமெரிக்க தூதர் தனது எக்ஸ் பக்கத்தில்,

"பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை சந்திப்பதில் மகிழ்ச்சி. 11

## கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தை தாளையடியில் திறந்தார் ஜனாதிபதி!

வடமராட்சி, ஓக. 03

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 266 மில்லியன் ரூபா திட்டத்தில் தாளையடியில் அமைக்கப்பட்ட கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று திறந்துவைத்தார்.

நேற்று காலை 10:30 மணியளவில் உள்ள சுப வேளையில் இந்த திறப்பு விழா இடம்பெற்றது.

பெருந்தொட்ட 11



## இலங்கைக்கு இராணுவ ரீதியில் உதவி வழங்க சீன அரசு தயார்!

### அந்நாட்டுத் தூதுவர் கி சென்ஹொங்

கொழும்பு, ஓக. 03

இலங்கை தனது இறைமை, ஆட்புல ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்கு இராணுவ ரீதியிலான உதவிகளை வழங்க தயார் என சீனா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான சீன தூதுவர் கி சென்ஹொங் இதனை தெரிவித்தார்.

இலங்கையில் புவிசார் அரசியல் நகர்வுகள் அதிகளவில் முன்னெடுக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலையில் அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கை இராணுவத்துக்கு தொடர்ந்தும் பயிற்சிகளை வழங்குவதற்கு சீனா தயாராகவுள்ளது 11





## யாழ்ப்பாணத்தில் விரைவில் 'சிமார்ட்' விவசாயத் திட்டம்!

### தாளையடியில் தெரிவித்தார் ஜனாதிபதி ரணில்

யாழ்ப்பாணம், ஓக. 03

"யாழ்ப்பாணத்தில் மிகவிரைவில் சிமார்ட் விவசாயம் மேற்கொள்ளவதற்குரிய வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். எதிர்வரும் காலங்களில் யாழ்ப்பாணம் அபிவிருத்தி அடைந்த ஒரு பிரதேசமாக மாறும்."

- இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

யாழ்ப்பானத்துக்கு நேற்று வருகை தந்த அவர் தாளை யடியில் அமைக்கப்பட்ட கடல் நீரை 11

## அடுத்த ஆண்டு ஆரம்பம் முதல் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

கொழும்பு. ஓக. 03

இளைஞர்களுக்கு தொழில் வழங்கும் வேலைத் திட்டம் அடுத்த வருடம் முதல் ஆரம்பிக்கப்படும் எனவும், அதற்காக அரச மற்றும் தனியார் துறைகளில் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதே தமது நோக்கமாகும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக கடந்த 4 வருடங்களாக 11

## மாகாண சபை தேர்தல் சட்டமூலம்: செப்ரெம்பர் 6ஆம் திகதி விவாதம்

கொழும்பு, ஓக. 03

மாகாண சபைத் தேர்தலைப் பழைய தேர்தல் சட்டத்துக்கு அமைவாக நடத்துவதற்கு வழி செய்யும் விதத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந் திரன் சமர்ப்பித்துள்ள தனிநபர் சட்ட மூலத்தை இரண்டாவது வாசிப்பு விவா தத்துக்காக எதிர்வரும் செப்டெம்பர் 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் எடுத்துக்கொள்வது 11

## பொருளாதார திருத்தத்தால் பாராட்டத்தக்க விளைவுகள்!

### இலங்கை நிலை குறித்து சர்வதேச நாணய நிதியம்

கொழும்பு, ஓக. 03

இலங்கை அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டம் பாராட்டத்தக்க விளைவுகளை தருகின்றது என தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியம், இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மூன்று காலாண்டு கால வளர்ச்சியை காண்பிக்கின்றது என தெரிவித்துள்ளது. 11

## ஜனாதிபதித் தேர்தலுக்கு பெரும் இடையூறு வரலாம்!

### விமல் வீரவன்ஸ முன்னெச்சரிக்கை

கொழும்பு, ஓக. 03

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டே கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளார். பொலிஸ் மா அதிபர் பதவி தொடர்பிலும் நெருக்கடி நிலைமையே நிலவுகிறது. இதற்கு விரைவான தீர்வு 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் அவர் அதிகளவான வாக்குகளைப் பெறவில்லை என்றால் அது பல கேள்விகளை எழுப்பிவிடும் என்று பலரும் கருத்து வெளியிட்டு வருகின்றனர். அவ்வாறு கருத்து வெளியிடுபவர்களில் முக்கியமானவர்கள் அரசியல்வாதிகள்தான். அதிலும், தேர்தல் அரசியலில் மிகுந்த அனுபவமுள்ளவர்கள் அவர்கள். அவர்கள் அவ்வாறு சந்தேகம் எழுப்புவது நியாயமானதா? என்ற கேள்வி எழுவதும் நியாயமானதுதான்.

ஆனால், அவர்கள் மத்தியில் ஏன் அப்படியொரு சந்தேகம் எழுகின்றது? அவர்கள் சொன்னால், அது நமது நன்மைக்காகத்தான் சொல்கிறார்கள் என்று தமிழ் மக்கள் நம்புவார்கள் என்பதில் அவர்களுக்கு இருக்கின்ற சந்தேகம்தான் அதற்கு பிரதான காரணமா என்று எண்ணத் தோன்றுகின்றது.

முன்னரும் இந்த விடயத்தை ஒரு தடவை எழுதியதாக ஞாபகம். இருந்தாலும் அது இந்த இடத்தில் குறிப்பிடப்படவேண்டும் என்பதால் மீண்டும் தருகின்றேன்.

இந்த ஊர்க்குருவிடம் வந்து அவர் நண்பர் ஒருவர் பத்தாயிரம் ரூபாய் கடனாகக் கேட்டார். அப்போது கையில் இருக்கவில்லை. சம்பளம் கிடைத்த மறுநாளே வந்து கேட்டாலும் இருந்திருக்காதுதானே.

இருந்தாலும், நண்பருக்கு ஆறுதலுக்காக சொன்னேன்: "மச்சான் கையில ஒண்டும் இல்லையடா, அடுத்த மாசம் சம்பளத்தோட பார்ப்பம்.." என்று.

அடுத்த மாதம் நண்பர் வந்தார், ஊர்க்குருவியும் போன மாதம் சொன்ன அதே பதிலையே சொன்னார். "அடுத்த மாதம் பார்ப்பம்.."

நண்பரும் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தார், ஐந்து மாதம் பத்துமாதம் அல்ல, அறுபது வருசத்திற்கும் மேலாக வந்து கொண்டே இருக்கிறார்.

இதன் பொருள் என்ன? அந்த நண்பருக்கு அவர் கேட்கும் பத்தாயிரம் ரூபாய் அவசியமாக தேவைப்படவில்லை. ஊர்க்குருவியிடமிருந்து கிடைத்தால் வாங்குவோம் என்பதுதானே? உண்மையாகவே அவருக்கு தேவை என்றால் இந்த ஊர்க்குருவி சும்மா ஏமாற்றிக்கொண்டே இருக்கிறான் என்று வியக்கியாரிடமோ அல்லது அப்புக்குட்டி அண்ணையிடமோ கேட்டிருப்பானே?

இதைப் போலத்தான் தமக்கு வாக்களிக்கும் மக்களுக்கும் தாங்கள் பெற்றுத்தருவதாக கூறிய சமஷ்டி தீர்வு உண்மையில் தேவையில் லையோ? அதனால்தான் நாங்கள் பெற்றுத்தருவோம் - இந்த பொங்கலுக்கு தருவோம் - அடுத்த தீபாவளிக்குத் தருவோம் என்கின்ற போதும் மக்கள் அவர்களுக்குத்தான் வாக்களிக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம், அவர்கள் மீதுள்ள நம்பிக்கையில் இல்லை. "ஏதோ அவங்கள்தானே தமிழருக்காக கதைக்கிறாங்கள்" என்ற ஒரு நம்பிக்கைதான் என்பது அவர்களுக்கு தெரிந்திருக்கின்றதுபோலும்.

இனி சொல்ல வந்த விடயத்துக்கு வருகின்றேன்.

"தமிழ் பொதுவேட்பாளர் தோல்வியடைந்த பின்னர், ஆட்சிப் பீடமேறும் பெரும்பான்மையின ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துடன் தமிழர்களுக்கான தீர்வு குறித்து பேச்சுகளை நடத்த முடியாத நிலை ஏற்படும்" - இவ்வாறு கூறியிருக்கிறார் தமிழ் அரசு கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன்.

இது நேற்றைய "ஈழநாடு" செய்தி ஒன்று.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைப்போன்று இம்முறை ஜனாதிபதித் தேர்தலிலும் தமிழ் மக்களின் வாக்குகள் மிக முக்கியமானவை. இதன்விளைவாக தற்போது நாம் பேரம் பேசக்கூடிய வலுநிலையில் இருக்கின்றோம். இவ்வாறிருக்கையில் பொது வேட்பாளரை களமிறக்குவது பொறுப்பற்ற செயல் என் றும் அவர் கூறியுள்ளார்.

நல்ல கருத்துத்தான். 2015 தேர்தலில் பேரம்பேசி தமிழ் மக்களுக்கு பெற்றுக்கொடுத்தது என்ன என்பதையும் அல்லவா சொல்லியிருக்க வேண்டும். நண்பர் சுமந்திரன், காணிகளை விடுவித்தோம் என்பார். பெரும் அபிவிருத்திகளை செய்தோம் என்பார். யுத்தம் முடிந்த பின்னர் அந்த பதினைந்தாம் ஆண்டு தேர்தல் வரை ஆட்சியிலிருந்த மகிந்த ராஜபக்ஷவும் காணிகளை விடுவித்திருக்கிறார். அதற்கு பின்னர் கோட்டாபயவும் விடுவித்திருக்கிறார். அது அவர்களால்தான் நடந்தது என்பது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவதற்கு சமனானது. அபிவிருத்தி: ஒவ்வொரு ஒழுங்கைகளிலும் நமது ஜனாதிபதி, பிரதமர் மட்டுமன்றி நமது எம். பிக்களின் படங்களுடனும் வீதிக்கு வீதி காணப்பட்ட பெயர்ப் பலகைகளைத்தான் அபிவிருத்தி என்கிறார் என்றால் அது சரியானதுதான். இவற்றைப் பெறுவதற்கு நாம் வலுவான நிலையில் இருக்கவேண்டியதில்லை. டக்ளஸ் போல அரசுடன் இணைந்திருந்தால் இன்னும் பல செய்திருக்கலாம்.

கடந்த பதினைந்து வருடங்களாக மக்கள் பிரதிநிதிகள் சொன்னவற்றையே மக்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். எதனையும் கண்டதில்லையே, இந்தத் தடவை சிவில் சமூகம் ஒரு முயற்சியைச் செய்து பார்க்க விரும்புகின்றது என்றால், அதற்கு வழிவிட்டுப் பார்க்க வேண்டியதுதானே. இதனால் வெற்றி பெறுபவருடன் பேரம்பேச முடியாத நிலை வந்தாலும் ஓர் ஐந்து வருடம்தானே. அதன் பின்னர் பேசுங்கள்.

மக்கள் உங்களுக்கு பதினைந்து வருடங்களை கொடுத்தார்கள். மன்னிக்கவும் அறுபது வருடங்களை கொடுத்தார்களே.

ஓர் ஐந்து வருடம் இவர்களுக்கு கொடுப்பதால் என்ன வந்துவிடப்போகிறது.

அவர்களின் முயற்சிக்கு நீங்களும் ஒத்துழைப்பு வழங்கினால், பொது வேட்பாளர் ஐம்பதுக்கும் அதிகமான அல்ல, எழுபது வீதத்துக்கும் அதிகமான வாக்குகளை பெறலாமே.! அது அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அதாவது இருபது முப்பதில் நடக்கும் தேர்தலில், நீங்கள் பேரம் பேசுவதற்கு இன்னமும் வலுவைப் பெற்றுத்தரும்.

- ஊர்க்குருவி.

## சந்நிதியானுக்கு நாளை கொடியேற்றம்

வடமராட்சி, ஓகஸ்ட் 2

வரலாற்று சிறப்புமிக்க தொண்டைமனாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

முக்கிய திருவிழாக்களான 5 ஆம் திருவிழாவான காலைத்திருவிழா சதுர்த்தி தினமான 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி இரவு 7 மணிக்கு விநாயகப் பெருமானுடன் முருகப் பெருமானும் எழுந்தருள்வார். 10 ஆம் திருவிழாவான பூங் காவன உற்சவம் 13 ஆம் திகதி செவ்வாய்கிழமை பகல் 9 மணிக்கு இடம் பெறும். 11ஆம் திருவிழா வான கைலாச வாகன உற்ச வம் 14 ஆம் திகதி புதன் கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். 14ஆம் திருவிழாவான சப்பறத் திருவிழா 17ஆம் திகதி சனிக் கிழமை இரவு 7 மணிக்கும், 15ஆம் திருவிழாவான தேர்த்திரு விழா 18 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 8 மணிக் கும், 16ஆம் திருவிழாவான தீர்த்தத்திருவிழா 19ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கும் நடை பெறும்.

தீர்த்தத்திருவிழா அன்று மாலை 6.30 மணிக்கு மௌனத் திருவிழாவுடன் வருடாந்த மஹோற்சவம் நிறைவு பெறும்.

மறுநாள் 20 ஆம் திகதி செவ்வாய் கிழமை மாலை 6.30 மணியளவில் தொண்டர் பூசை நடைபெறும். மகோற்சவ தினங்களில் சந்நிதி சுற்றாடலில் அமைந்துள்ள அன்னதான மடங்களில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(அ-2)

## யுக்திய நடவடிக்கையில் 694 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஓக. 03

நாடளாவிய ரீதியில் நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் நடத்தப்பட்ட யுக்திய நடவடிக்கையில் போதைப் பொருள் குற்றம் தொடர்பில் 694 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 680 ஆண்களும் 14 பெண்களும் அடங்குவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான சந்தேகநபர்களில் 14 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 13 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 187 கிராம் 842 மில்லி கிராம் ஹெரோயின், 253 கிராம் 839 மில்லி கிராம் ஐஸ், 2,557 கிராம் மில்லி 823 கிராம் கஞ்சா , 225 போதை மாத்திரைகள் மற்றும் 2,027 கஞ்சா செடிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

(ஐ)



மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய பெருந் திருவிழாவில் நேற்றுமுன்தினம் வேட்டைத் திருவிழா நடைபெற்ற வேளை...!

## சர்வஜன அதிகாரம் கூட்டணி வேட்பாளர் நாளை அறிவிப்பு!

கொழும்பு,ஓக. 03

சர்வஜன அதிகாரம் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் நாளை ஞாயிற்றுக் கிழமை அறிவிக்கப்படவுள்ளார். வேட்பாளராக பிரபல வர்த்தகர் திலித் ஜயவீரவே முன்னிறுத்தப்படுவார் என்று கூறப்படுகின்றது.

மவ்பிம ஜனதா கட்சியின் தலைமையில் சர்வஜன அதிகாரம் என்ற கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கிவரும் எம். பிக்களின் ஆதரவுடன் மவ்பிம ஜனதா கட்சியின் தலைவரான வர்த்தகர் திலித் ஜயவீரவால் சர்வஜன அதிகாரம் கூட்டணி உருவாக்கப் பட்டுள்ளது.

இந்தக் கூட்டணியில் பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஜி வாசுதேவ நாணயக்கார மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஆளுநர்கள், முன்னாள் மாகாண சபை, பிரதேச சபை உறுப்பினர்கள் என பலர் இணைந்துள்ளனர்.

தேசியவாதத்தை முன்னிறுத்தி மவ்பிம ஜனதா கட்சி உருவாக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் திலித் ஜயவீர கட்சியின் கொள்கை விளக்க மாநாட்டில் அறிவித்திருந்தார். இந்தக் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் நாளை அறிவிக்கப்படவுள்ளார்.

இதற்காக கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் பிரமாண்ட நிகழ்வு ஒன்றை நடத்துவதற்காக ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

திலித் ஜயவீர ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று கட்சியை ஆரம்பித்த காலத்திலேயே கூறியிருந்தார். சர்வஜன அதிகாரம் கூட்டணியின் பிரதான நன்கொடையாளராகவும் இவர் இருப்பதால் வேட்பாளராக அவரையே அந்தக் கூட்டணி அறிவிக்கும் என்று கூறப்படுகின்றது.

(ஐ)

## மதுபான விலையை குறைக்க விடுத்த கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, ஓக. 03

மதுபான வகைகளின் சிறிய ரக போத்தல்களின் விலையை நூறு ரூபாயால் குறைக்குமாறு மதுபான உற்பத்தியாளர்களிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையை அவர்கள் நிராகரித்துள்ளனர்.

மதுபான உற்பத்தியாளர்களுடன் மதுவரித் திணைக்களத்தில் நடந்த சந்திப்பில் மதுவரி ஆணையாளர் நாயகம் எம். ஜே. குணசிறி விலைக் குறைப்பு கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

எத்தனோல் லீற்றர் ஒன்றின் விலை 600 ரூபாயால் அண்மையில் குறைந்துள்ளதால் மதுபானத்தின் விலை குறைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

மேலும்இ விலையேற்றத்தால் மது விற்பனை 40வீதம் குறைந்துள்ளதுடன், சட்டவிரோத மதுபானத்தை பாவிக்கும் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

எவ்வாறாயினும், மதுபான உற்பத்தி பொருட்கள்மீது விதிக்கப்பட்டுள்ள கலால் வரி காரணமாக விலையை குறைக்க முடியாது என்று மதுபான உற்பத்தியாளர்கள் இதன்போது தெரிவித்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
03.08.2024 சனிக்கிழமை
குரோதி வருடம், ஆடி 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்தப் பிரச்னைக்கு என்னதான் தீர்வு?

நெடுந்தீவுக்கு அருகே கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழ் நாட்டு (இந்திய) மீனவர்களில் ஒருவர் உயிரிழந்ததை தொடர்ந்து, மீண்டும் தமிழ் நாட்டில் மீனவர் விவகாரம் கொதி நிலை அடைந்திருக்கின்றது. வழமைபோல் தமிழ் நாட்டு அரசியல் வாதிகள் இலங்கையின் மீதான கண்டனத்தை பதிவு செய்ததுடன், இந்திய மத்திய அரசின் தலையீட்டைக் கோரியிருக்கின்றனர். நெடுந் தீவு அருகே மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்களின் படகின் மீது, இலங்கை கடற்படையின் ரோந்துப் படகு மோதியதைத் தொடர்ந்தே, குறித்த மீனவர் உயிரிழந்துள்ளதாக குற்றஞ்சாட்டப் படுகின்றது.

தமிழ் நாட்டு மீனவர்கள், இலங்கையின் கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடிப்பது தொடர்பில், வடபுல கடற்றொழிலாளர்கள் தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துவருகின்றனர். அதே போன்று, இலங்கை கடற்படையினர் தமிழ் நாட்டு மீனவர்களை துன்புறுத்துவதாகவும், கொலை செய்வதாகவும் தமிழ் நாட்டு அர சாங்கம் தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றது.

ஆனாலும் இந்தப் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வை காண முடியவில்லை. வடபுல மீனவர்கள் பாதிக்கப்படும்போது, யாழ் துணைத் தூதரகத்திற்கு முன்பாக வடபுல மீனவர்கள் ஒன்று திரண்டு எதிர்ப்பு வெளியிடுகின்றனர். அதேபோன்று, தமிழ் நாட்டு மீனவர்கள் சிறைவைக்கப்படும் போது தமிழ்நாட்டில் மீனவர்கள் கொந்தளிக்கின்றனர். இலங்கை அரசை எதிர்த்து ஆர்ப்பாட்டங் களை முன்னெடுக்கின்றனர். இந்தப் பிரச்னை இப்படியே தொடர் கின்றது. தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் நுழை வதை நிறுத்தவில்லை. இதனால் பிரச்னையும் தொடர்கின்றது.

இந்தப் பிரச்னையை தீர்க்க வேண்டுமாயின் முத்தரப்பு அணுகு முறை தேவை. இலங்கை அரசாங்கம் - இந்திய மத்திய அரசாங்கம் மற்றும் தமிழ் நாட்டு அரசாங்கம் ஆகிய மூன்றும் ஒன்றிணைந்து, ஆக்கபூர்வமான தலையீட்டை செய்வதன் ஊடாக மட்டுமே இந்தப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வை காண முடியும். ஆனால், இது இலகு வானதல்ல என்பதுடன் மிகவும் சிக்கலானதும் கூட. இதன் காரண மாகவே இந்தப் பிரச்னையை இதுவரையில் தீர்க்க முடியவில்லை. ஆனால் இந்தப் பிரச்னை தற்போது புதிய பரிமாணத்தையும் பெற்றி ருக்கின்றது.

இந்திய மீனவர்கள் தொடர்பான அதிருப்திகள் வடபுல மீனவர் கள் மத்தியில் அதிகரித்துவருவதானது, இன்னொரு புறம் இந்தி யாவின் மீதான அதிருப்தியாக மாறிவிடுவதற்கான வாய்ப்புக் களை கொண்டிருக்கின்றது. இந்த இடைவெளியில், சீனாவோ, கருணையாளராக உள்நுழைய முயற்சிக்கின்றது.

சாதாரண மக்கள் இலகுவில் பாதிக்கப்படக்கூடியவர்கள். அவர்கள் விடயங்களை ஒரு போதுமே, ஆழமாக நோக்கும் திறன் கொண்ட வர்கள் அல்லர். அரசியல் தலைமைகள்தான் விடயங்களை நிதானமாகக் கையாள வேண்டும். இந்திய மத்திய அரசாங்கம் நினைத்தால் போல் பிரச்னையை தீர்த்துவிட முடியாது - ஏனெ னில், இது மூன்று தரப்புக்கள் சம்பந்தப்பட்டது. குறிப்பாக தமிழ் நாட்டு அரசாங்கத்தின் ஆதரவின்றி, இந்திய மத்திய அரசால் எதனையும் செய்துவிட முடியாது. இலங்கை போன்று, இந்தியா ஒற்றையாட்சி யால் இறுக்கப்பட்டிருக்கும் ஒரு நாடல்ல. இந்திய மத்திய அர சாங்கத்திற்கு மாநிலத்திற்குள் தலையிடுவதில் மட்டுப்பாடுகள் உண்டு. இந்தப் பிரச்னையை தீர்ப்பதற்கான புதிய அணுகுமுறைகள் தொடர்பில் அனைவரும் சிந்திக்க வேண்டும்.

# ஆஸியின் பிரிஸ்பேர்னில் நாளை நூல் வெளியீடும் இலக்கிய அரங்கும்

பிரிஸ்பேர்ன், ஒக. 03

அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் அனுசரணையில் ஐங்கரன் விக்கினேஸ்வரா வின் மூன்று நூல்கள் வெளி யீடும் இலக்கிய அரங்கும் பிரிஸ்பேர்ன் மாநகரில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

பலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறை விடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ் வராவின் மூன்று நூல்கள் வெளியீடு பிரிஸ்பேர்னில் உள்ள மவுண்ட் ஓமாணி நூலக மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 முதல் 5.30 மணி வரை இந்த வெளி யீட்டு நிகழ்வு நடைபெற வுள்ளது.

இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை ஈழத்தின் மூத்த பெண் எழுத் தாளர் ‘தாமரைச் செல்வி’ திருமதி. ரதிதேவி கந்தசாமி வழங்குவார். அத்துடன் தமிழ் வாழ்த்து பாடலை பிரிஸ்பேர்ன் தமிழ்ப் பாட சாலை மாணவர்கள் பாட வுள்ளனர்.

தலைமையுரையை அவுஸ்திரேலிய தமிழ் காங் கிரஸ், குயின்ஸ்லாந்து கிளை யின் மூத்த செயல் பாட்டா ளர் செந்தில்குமரன் ஆற்று வார். பலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவு ரையை சிவா கைலாசம் நிகழ்த்துவார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ் ரேல் நூலின் அறிமுகவு ரையை டாக்டர் துஷ்யந்தன் திசைநாயகம் ஆற்றுவார்.

இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறி முகவுரையை ரஜினிகாந்த் ஜெயராமன் ஆற்றுவார்.

அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் அனுசரணையில் நடைபெறும் நூல் வெளி யீ டும் இலக்கிய அரங்கின் ஏற் புரையை ஐங்கரன் விக்கி னேஸ்வரா நிகழ்த்துவார்.

## வாள்வெட்டு சந்தேகநபர் ஒரு வருடத்தின் பின்னர் கைது!

யாழ்ப்பாணம், ஒக. 03

வாள்வெட்டு சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய சந்தேகநபர ஒருவர் ஒரு வரு டத்தின் பின்னர் கைது செய் யப்பட்டுள்ளார்.

நவாலியில் நடத்தப்பட்ட வாள்வெட்டு சம்பவத்து டன் தொடர்புடைய சந் தேகநபரே நேற்று முன் தினம் மானிப்பாய் பொலி ஸாரால் கைது செய்யப்பட் டுள்ளார்.

2023 ஜூன் மாதம் இளை ஞர்மீது நடத்தப்பட்ட வாள் வெட்டு சம்பவம் தொடர்பி லேயே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

## கொள்கை பிரகடனம்!

யாழ்ப்பாணம், ஒக. 03

மக்கள் போராட்ட முன் னணியின் “கொள்கைப் பிர கடனம்” நாளை ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் றிம் மர் மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஜனாதி பதி வேட்பாளர் நுவன் போபகே, சி. கா. செந்தி வேல், துமிந்த நாகமுவ, சுவஸ்திகா அருலிங்கம், ராஜ்குமார் ரஜீவ்காந், பிர சாந்தினி பிரதீபன், லங்கா பேலி ஆகியோர் உரை யாற்றவுள்ளனர். (ஐ)

# மோட்டார் சைக்கிள் மோதி பாதசாரி ஒருவர் உயிரிழப்பு

## மற்றொருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக. 03

வீதியோரம் நடந்து சென்றவர்களை மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்ற வர் படுகாயமடைந்துள் ளார்.

ஏ-9 வீதி சாவகச்சேரி - நுணவில் சந்திக்கு அண்மை யாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இந்த விபத்து இடம்பெற்றுள் ளது.

யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த மோட்டார் சைக் கிள் வீதியோரமாக நடந்து சென்ற இருவரை மோதி யது. இதில், இருவரும் படு காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க் கப்பட்டனர்.

பின்னர் மேலதிக சிகிச் சைக்காக இருவரும் யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். இதில், 56 வயது நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ஐ)

# மர்மமாக உயிரிழந்த யானையின் உடல் மீட்பு

முல்லைத்தீவு, ஒக. 03

முள்ளியவளை - ஐயன் கன்குளம் பகுதியில் மர்ம மான முறையில் உயிரிழந்த நிலையில் யானையின் உடல் நேற்று வெள்ளிக் கிழமை காலை மீட்கப்பட் டது.

யானை இறந்து கிடந்த வயலின் உரிமையாளர் பொலிஸாருக்கு அளித்த தகவலின் அடிப்படையில் யானையின் சடலம் மீட் கப்பட்டது.

யானையின் இறப்புக் கான காரணம் தெரிய வர வில்லை. இது தொடர்பில், வன ஜீவராசிகள் திணைக் கள அதிகாரிகள் மற்றும் பொலிஸார் இணைந்து விரி வான விசாரணைகளை முன் னெடுத்து வருகின்றனர்.

வனஜீவராசிகள் திணைக் களத்தினர் யானையின் உடலை பிரேத பரிசோத னைக்கு உட்படுத்தத் தீர்மா னித்துள்ளனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நினைத்தை முடிப்பீர்கள்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். இனிமையான நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள்.

**கடகம்**
குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. உடல்நலத்தில் கவனம் தேவை. சகோதர வகையில் மனத்தாங்கல் வந்து நீங்கும். மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். பொறுமை தேவையான நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். நன்மை நடக்கும் நாள்.

**கன்னி**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். சாதிக்கும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு**
சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த ஆபரணம் கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**மகரம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**கும்பம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மீனம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். திருப்தி உண்டாகும். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

# சென்னையின் 16 தொகுதிகளிலும் அ. தி. மு. க. வெற்றிபெற வேண்டும்

### பொதுச் செயலாளர் அறிவுறுத்தல்

சென்னை, ஒக. 03

2026ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் சென்னையின் 16 தொகுதிகளிலும் அ. தி. மு. க. வெற்றி பெற வேண்டும் என்று கட்சி நிர்வாகிகளுக்கு பொதுச் செயலாளர் பழனிசாமி அறிவுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலில் அ. தி. மு. க. கூட்டணி 39 தொகுதிகளிலும் தோல்வியடைந்த நிலையில், மக்களவைத் தொகுதி வாரியாக கட்சி நிர்வாகிகளிடம் பழனிசாமி ஆலோசனை நடத்தி வருகிறார்.

இதன்படி வடசென்னை, மத்திய சென்னை, தென் சென்னை ஆகிய மக்களவைத் தொகுதிகளைச் சேர்ந்த மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் போட்டியிட்ட வேட்பாளர்கள் ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார். இதன்போதே மேற்கண்டவாறு அறிவுறுத்தினார். (எ)

# 2026இல் தே. ஜ. கூட்டணியை சேர்ந்தவர் தமிழகத்தின் முதல்வராக இருப்பாராம்

### பா. ஜ. க. மாநில துணைத் தலைவர்

தேவகோட்டை, ஒக. 03

2026ஆம் ஆண்டில் தேசிய ஜனநாயக கூட்டணியைச் சேர்ந்தவர் தான் தமிழகத்தின் முதல்வராக இருப்பார் என்று பா. ஜ. க. மாநிலத் துணைத் தலைவர் நாராயணன் திருப்பதி தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் பா. ஜ. க. சார்பில் பாராளுமன்றத் தேர்தல் நன்றி அறிவிப்பு மற்றும் மத்திய பட்ஜெட் விளக்க பொதுக் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மத்திய அரசின் திட்டங்களால் தமிழகம் அதிக பயனடைந்துள்ளது. ஆனால், பட்ஜெட்டில் தமிழகம் உள்வாங்கப்படவில்லை. திருக்குறள் வரவில்லை என்று வேண்டுமென்றே கட்டுக்கதை சொல்லி திசை திருப்ப நினைப்பது பலிக்காது.

தமிழக முதல்வர் ஸ்டாலின் மக்களுக்காக பணியாற்ற வேண்டும். தங்களது குடும்பத்துக்காக பணியாற்றக் கூடாது. தமிழகம் கொலைகார மாநிலமாக மாறியுள்ளது. தமிழக அரசு திறனற்று போய் உள்ளது. அதிகார மமதையோடு நடப்போர் யாராக இருந்தாலும் பா. ஜ. க. வன்மையாக கண்டிக்கும்- என்றார். (எ)

# வழிப்பறி கொள்ளையர்போல் செயல்படுகிறது தி. மு. க. அரசு

### ஓ. பி. எஸ். கடும் சாடல்



சென்னை, ஒக. 03

பொதுமக்களுக்கு நிம்மதியை உருவாக்கித் தரவேண்டிய ஓர் அரசு வழிப்பறிக் கொள்ளையர்கள்போல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது- இவ்வாறு முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

தொழில் வரி, தொழில் உரிமக் கட்டணம் மற்றும் விளையாட்டுப் போட்டி மற்றும் பயிற்சிக் கட்டணம் ஆகிய வற்றை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், தி. மு. க. ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்தே பொது மக்களிடமிருந்து எந்தெந்த வழியில் வரி வசூலிக்கலாம் என்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறதே யொழிய, பொதுமக்களின் நிதிச் சுமையை குறைப்பது பற்றி துளிகூட சிந்திப்பதில்லை என்று ஓ. பி. எஸ். மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# இலங்கையில் இறந்த மீனவரின் உடலை உடன் தாயகம் கொண்டுவர வேண்டும்

### மத்திய அமைச்சருக்கு முதல்வர் கடிதம்

சென்னை, ஒக. 03

இலங்கை கடற்படை படகு மோதியதில் இறந்த மீனவரின் உடலை உடனடியாக தாயகம் கொண்டுவரவும், காயமடைந்தவர்களை தமிழகம் அழைத்து வரவும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு முதல்வர் மு. க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் ராமேஸ்வரத்தில் இருந்து இழுவைப்படகுகளில் சென்று நெடுந்தீவு அருகில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கை கடற்படை ரோந்து படகு மோதியது. இதில் படகு சேதமடைந்ததால், மலைச்சாமி என்ற மீனவர் கடலில் மூழ்கி இறந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் இரங்கல் தெரிவித்திருந்த முதல்வர் மு. க. ஸ்டாலின், மலைச்சாமி குடும்பத்தினருக்கு முதல்வர் நிவாண நிதியில் இருந்து 10 இலட்சம் ரூபாய் வழங்க உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில், மத்திய அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் எழுதிய கடிதத்தில், இறந்த மீனவர் உடலை தாயகம் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். (எ)

# ஒகேனக்கல் காவிரி ஆற்றில் 2 இலட்சம் கனஅடி நீர்வரத்து



மேட்டூர், ஒக. 03

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து நேற்று முன்தினம் விநாடிக்கு 2 இலட்சம் கனஅடியைக் கடந்தது. மேட்டூர் அணையிலிருந்து 2ஆவது நாளாக விநாடிக்கு 1,70, 000 கனஅடி வீதம் உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

கர்நாடக அணைகளில் இருந்து அதிகளவு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் விநாடிக்கு 1,40,000 கனஅடியாக இருந்த நீர்வரத்து முன்தினம் காலை 1,65,000 கனஅடியாகவும், மாலை 6 மணியளவில் 2 இலட்சத்து ஐயாயிரம் கனஅடியாகவும் அதிகரித்தது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். - சென்னை விமான சேவையை செப். 1இல் ஆரம்பிக்கிறது இன்டிகோ

சென்னை, ஒக. 03

இந்தியாவின் மிகப்பெரிய விமான நிறுவனமான இன்டிகோ எதிர்வரும் முதலாம் திகதி முதல் யாழ்ப்பாணம் - சென்னை இடையே தினசரி விமான சேவையை ஆரம்பிக்கிறது.

இலங்கையில் கொழும்புக்கு அடுத்தப்படியாக இரண்டாவது இடமாக யாழ்ப்பாணத்துக்கான சேவையை இன்டிகோ அறிவித்துள்ளது.

விமானத்துக்கான முன்பதிவு நேற்று முன்தினம் ஆரம்பமானது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக்கான சர்வதேச சுற்றுலா பயணிகளின் வருகையில் இந்தியா தொடர்ந்தும் முன்னிலை வகிக்கின்றது. இந்தப் பின்னணியிலேயே இன்டிகோவின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜனாதிபதி ரணிலுடன் சுமந்திரன் சந்திப்பு!

கொழும்பு, ஒக. 03

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தமிழ் அரசுக் கட்சியின் சுமந்திரன் எம். பி. சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது. அதிகார பகிர்வு தொடர்பான தொடர்ச்சியான கலந்துரையாடல்களின் ஒரு கட்டமாகவே இந்த சந்திப்பு நடந்ததாக சுமந்திரன் எம். பி. குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, மாகாண சபைகள் தேர்தல் தொடர்பாக சுமந்திரனால் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணையை இந்த மாதத்தின் இறுதி வாரத்தில் பாராளுமன்றில் நிறைவேற்ற ஒத்துழைப்பதாக ஜனாதிபதி இதன்போது உறுதியளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.



# கலாசாலை ஆசிரியர்க்கு கணிதம் கற்பித்தல் தொடர்பான கருத்துரை

யாழ்ப்பாணம், ஒக. 03

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பிரதி புதன்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஒன்றுகூடலில் கணிதம் கற்பித்தல் தொடர்பான கருத்துரை நடைபெற்றது.

இந்தக் கருத்துரையில் மூத்த எழுத்தாளர் நெடுந்தீவு மகேஷ் கலந்து சிறப்பித்தார். கலாசாலையின் ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி பாத்திமா றிஸ்ரினா நிகழ்வுகளை நெறிப்படுத்தினார்.

ஆசிரிய மாணவன் இ. செந்தூர்ச்செல்வன் நெடுந்தீவு மகேஷ் எழுதிய தாரணி ஒரு ஆச்சரியக் குறி என்ற நூல் பற்றிய நயப்புரையை ஆற்றினார். நெடுந்தீவு மகேஷ் பற்றிய அறிமுகவுரையை கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் மேற்கொண்டார்.

நிகழ்வில் நிறைவுரையாற்றிய கலாசாலை அதிபர் ச. லலீசன் ஓர் எழுத்தாளனாவதற்கு அவசியமான விடயம் அனுபவங்களை சேகரித்து வைத்திருத்தல் என்று குறிப்பிட்டதோடு, ஆசிரியர்கள் ஆக்கத்திறன்மிக்கவர்களாக தம்மை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் அதற்கேற்றாற்போல கவிதைகள், சிறுகதைகள் போன்றவற்றை படைப்பதற்கு முயற்சி செய்யுமாறும் ஆலோசனை கூறினார்.

எழுத்தாளர் நெடுந்தீவு மகேஷ் கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார். (அ)

# நூறு ரூபாய் கொடுத்தாலே சுடுதண்ணீர் கிடைக்குமாம்!

## பருத்தித்துறை மருத்துவமனையிலேயே இந்த அவலமென நோயாளர் விசனம்!

வடமராட்சி, ஒக. 03

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை உணவுச்சாலையில் மாலை 6 மணிக்கு பின்னர் 100 ரூபாய் வழங்கினாலேயே சுடு தண்ணீர் வழங்கப்படுமாம். அத்துடன், அங்கு நோயாளர்களுக்கு பொருத்தமற்ற உணவுகளே விற்பனையாகின்றன என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது.

நேற்று முன்தினம் மூவர் மாலை 6.45 மணியளவில் உணவுச்சாலையில் சுடுதண்ணீர் கேட்டுள்ளனர். ஒருவர் நூறு ரூபாய் தந்தாலே சுடுதண்ணீர் வழங்க முடியும் என்று உணவுச்சாலையை நடத்துபவர் கூறியுள்ளார் என்று தெரிய வருகின்றது.

இதேநிலைமையே, கடந்த பல நாட்களாக தொடர்கிறது. இதனால், அங்கு தங்கி சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி உணவுச்சாலை முகாமையாளரிடம் கேட்டபோது, மாதாந்தம் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கு உணவுச்சாலைக்கு குத்தகை செலுத்துவதால் தாம் பாதிக்கப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, செல்வச்சந்நிதியான் ஆச்சிரமம் பல இலட்சம் ரூபாய் செலவில் அமைத்து வழங்கிய சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் இயந்திரமும் பராமரிப்பின்மையால் செயலிழந்துள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (ஐ-02)

# இரணைமடுக்குள விவசாயிகளின் முறைப்பாடு குறித்து விசாரணை

கிளிநொச்சி, ஒக. 03

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழான 2024 சிறுபோக செய்கையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் முறைப்பாடுகளுக்கு அமைவாக மாவட்ட செயலகத்தால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின்கீழ் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக செய்கையில் குறிப்பிட்ட சில விவசாய அமைப்புகள் ஒதுக்கீட்டு பிரதேசத்துக்கு மேலதிகமாக பயிர்செய்கை செய்துள்ளனர். இதனால், தாம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று விவசாயிகள் கடந்த 23ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் முறையிட்டனர்.

இது தொடர்பிலேயே குழு ஒன்றை அமைத்து விசாரணைகளை கிளிநொச்சி மாவட்ட செயலகம் ஆரம்பித்துள்ளது. இதில், தேவன்முறிப்பு, சின்னக்காடு உள்ளிட்ட பிரதேசங்களில் அனுமதிக்கப்பட்டதை விட அதிக பரப்பில் நெல் விதைக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கைதான இந்திய மீனவர்களை தூதரக அதிகாரிகள் சந்தித்தனர்

யாழ்ப்பாணம், ஒக. 03

நெடுந்தீவு கடற்பரப்பில் கடற்படை படகு மோதிய போது கவிழ்ந்த படகில் இருந்து மீட்கப்பட்ட இரண்டு மீனவர்களை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் அதிகாரிகள் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்துக்கு சென்று சந்தித்துள்ளனர்.

மீனவர்களிடம் நலன் விசாரித்த, இந்திய தூதரக அதிகாரி சாய் முரளி அவர்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

அத்துடன், அவர்களின் நலனை உறுதி செய்வதற்காக இந்தியாவில் உள்ள அவர்களது குடும்பங்களுக்கு தொலைபேசி அழைப்புகளையும் தூதரக அதிகாரிகள் ஏற்படுத்திக் கொடுத்தனர்.

முன்னதாக, நேற்று முன்தினம் நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்த இந்திய மீனவர்களை கைது செய்ய முயன்றபோது கடற்படை கப்பல் மோதியதில் மீனவர் படகு கவிழ்ந்தது. இதில், ஒரு மீனவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். மற்றொருவர் காணாமல் போனார். இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழ். கிளிநொச்சிக்கு நிரந்தர அரச அதிபர்களை நியமிக்குக

## ஜனாதிபதிக்கு விக்னேஸ்வரன் கடிதம்

யாழ்ப்பாணம், ஒக. 03

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு நிரந்தர மாவட்ட செயலாளர்களை உடன் நியமிக்குமாறு கோரி அவசர கடிதத்தை பாராளுமன்ற உறுப்பினர் க. வி. விக்னேஸ்வரன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான நிரந்தர மாவட்ட செயலாளர்கள் நியமனம் தொடர்பில் ஏற்கனவே விக்னேஸ்வரன் எம்.பி. ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியிருந்தார். இந்த நிலையில், பதில் அரச அதிபர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே, நிரந்தர மாவட்ட செயலாளர்களை நியமிக்குமாறு கோரி விக்னேஸ்வரன் எம். பி. மீண்டும் கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

# தனித்திருந்த மூதாட்டியை தாக்கி நகை, பணம் கொள்ளை!

வடமராட்சி, ஒக. 03

வீட்டில் தனித்திருந்த மூதாட்டியை தாக்கிக் காயப்படுத்தியதுடன் அவரின் தாலிக்கொடி, தோடு போன்ற நகைகளையும் 10 ஆயிரம் ரூபாய் பணத்தையும் கொள்ளையிட்டவர்கள், அவரின் காணி உறுதியையும் தீயிட்டு கொழுத்தியுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு - குடத்தனை மேற்கு பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மூதாட்டி உறங்கிக் கொண்டிருந்தபோது வீட்டின் கதவை உடைத்து நுழைந்த முகமூடி அணிந்த மர்மநபர்கள் அவரை தாக்கியுள்ளனர். அத்துடன், அந்தப் பெண்ணிடம் இருந்த தங்கத் தோடு, தாலிக்கொடி போன்றவற்றை கொள்ளையிட்டதுடன், 10ஆயிரம் ரூபாய் பணத்தையும் பறித்தனர்.

அத்துடன், அந்த மூதாட்டி அண்மையில் கொள்வனவு செய்திருந்த காணி உறுதியை மிரட்டிப் பெற்றவர்கள் அதனை தீயிட்டு எரித்துள்ளனர். அத்துடன், வீட்டிலிருந்த உடைகளையும் எரித்து விட்டு சென்றுள்ளனர்.

மூதாட்டியின் கணவர், அண்மையில் கொள்வனவு செய்த காணியில் கட்டப்படும் வீட்டுக்கு காவலுக்கு சென்றிருந்த சமயம் இந்தக் கொள்ளை இடம்பெற்றுள்ளது. வீடு திரும்பிய அவர் மனைவியை மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்தார்.

மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய மக்கள் கூட்டணியின் உடன்படிக்கை வியாழனன்று

**கொழும்பு, ஓக. 03**

**எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் உருவாக்கப்படவுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணி கட்சிகளின் புரிந்துணர்வு உடன்படிக்கை எதிர்வரும் 8ஆம் திகதி கைச்சாத்திடப்படவுள்ளது.**

கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இதற்கான நிழ்வு நடைபெறவுள்ளது.

தமிழ் முற்போக்கு கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ், டலஸ் அழகப்பெரும, ரொஷான் ரணசிங்க, பேராசிரியர் ஜீ. எல் பீரிஸ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க போன்றவர்கள் இந்தக் கூட்டணியில் இணையவுள்ளனர்.

கூட்டணிக்கு பின்னர் பரந்துபட்ட எதிர்க்கட்சி கூட்டணியாக ஜனாதிபதித் தேர்தல் பிரசார வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# லொறி - பேருந்து மோதிய விபத்தில் 8 பேருக்கு காயம்!

நுவரெலியா, ஓக. 03

லொறியும் சொகுசு பேருந்தும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 8 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

நுவரெலியா - ஹற்றன் ஏ7 பிரதான வீதியில் லிந்துலை - பாமஸ்டன் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தலவாக்கலையில் இருந்து நுவரெலியா நோக்கி பயணித்த லொறியுடன் நுவரெலியாவில் இருந்து ஹற்றன் நோக்கி பயணித்த சொகுசு பேருந்து வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் லிந்துலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 67 வீதத்தினருக்கு பாதுகாப்பான குடிதண்ணீர் கிடைக்கவில்லை!

கொழும்பு, ஓக. 03

நாட்டின் மக்களில் 67 சதவீதத்தினருக்கு பாதுகாப்பான குடிதண்ணீர் கிடைக்கவில்லை என்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.

நாட்டின் குடிதண்ணீரின் தரம் குறித்து மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவர திணைக்களம், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட் டமைப்பு அபிவிருத்தி அமைச்சு மற்றும் யுனிசெவ் என்பன இணைந்து நடத்திய ஆய்விலேயே இந்த விடயம் வெளிப்பட்டது.

இந்த ஆய்வு தொடர்பில் கருத்து வெளியிட்ட பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் வசந்த அத்துக்கோரள மேற்படி விடயத்தைத் தெரிவித்தார்.

நாட்டின் 25 மாவட்டங்களிலும் உள்ள நகர்ப்புற, கிராமப்புற மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளை உள்ளடக்கிய 3 ஆயிரத்து 210 வீடுகளின் மாதிரிகளை பயன்படுத்தி இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது என்று தெரியவந்தது. (ஐ)

# சதொசவில் விலைகள் குறைப்பு

கொழும்பு, ஓக. 03

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலைகளை குறைப்பதற்கு லங்கா சதொச நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்கின் மொத்த விலை 35 ரூபாயால் குறைக்கப்பட்டு 240 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

1,020 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் வெள்ளை கௌப்பி 998 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

ஒரு கிலோகிராம் சிவப்பு கௌப்பி 10 ரூபாயால் குறைக்கப்பட்டு 940 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

அத்துடன், இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 265 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது. (ஐ)

# நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தில் திருத்தங்கள்!

**வர்த்தமானி வெளியீடு**

கொழும்பு, ஓக. 03

2024ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் வர்த்தமானியில் வெளியானது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் உத்தரவுக்கு அமைய இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பல தரப்பினருடன் பேசி இது தொடர்பான திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் - என்று அமைச்சர் தெரிவித்தார்.

# மாணவர்களுக்கான காப்பீட்டு திட்டம் நடைமுறைக்கு வந்தது

கொழும்பு, ஓக. 03

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் சுரக்ஷா காப்பீட்டு வேலைத்திட்டம் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களும் இந்த காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் நன்மை அடைய முடியும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

சுரக்ஷா காப்புறுதி 45 இலட்சம் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இதன்படி, 3 வருடங்களுக்கு மாணவர்களுக்காக 71 இலட்சம் ரூபாய் நிதி அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# தேங்காய் தலையில் விழுந்து முன்பள்ளி மாணவி மரணம்!

கொழும்பு, ஓக. 03

முன்பள்ளியின் முற்றத்தில் நின்ற தென்னையிலிருந்து விழுந்த தேங்காயால் சிறுமி ஒருவரின் உயிர் பறிபோனது.

கேகாலை - மாவனெல்லையில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முன்பள்ளி முடிவடைந்த பின்னர் உயிரிழந்த சிறுமியும் அவருடன் பயிலும் சிறுமிகளும் முற்றத்துக்கு வந்துள்ளனர். அப்போது, சிறுமியின் தலையில் தேங்காய் விழுந்துள்ளது.

இதையடுத்து, சிறுமி உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர், அவர் உடனடியாக கண்டி தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். ஆனால், அங்கு சிறுமி உயிரிழந்தார். (ஐ)

# இணைவழி நிதி மோசடி; 8 வெளிநாட்டவர் கைது!

கொழும்பு, ஓக. 03

இணையவழி நிதி மோசடியில் ஈடுபட்ட வெளிநாட்டு பிரஜைகள் 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி உடுகம வீதியில் இருந்த ஹோட்டல் ஒன்றில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

காலி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் 24 முதல் 36 வயதுக்குட்பட்ட 6 சீன பிரஜைகளும் கஸகஸ்தான் மற்றும் கிர்கிஸ்தானை சேர்ந்த இரண்டு நபர்களும் உள்ளடங்குவர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 9 கணினிகள், 73 கைபேசிகள் மற்றும் பல சிம் அட்டைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# அரிசியில் கனரக உலோகம் சிறுநீரக நோய் அதிகரிப்பு!

**உணவு கட்டுப்பாட்டு பிரிவு**

கொழும்பு, ஓக. 03

அரிசியில் காட்மியம், ஈயம் போன்ற கனரக உலோகங்கள் கலந்திருப்பது பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் உணவு கட்டுப்பாட்டு பிரிவின் பிரதி பணிப்பாளர் நாயகம் ஆனந்த ஜயலால் தெரிவித்தார்.

இந்த கனகர உலோகங்களால் சிறுநீரக நோயாளர்கள் நாட்டல் அதிகரித்துள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நாளாந்தம் 200 கிராம் அரிசியை உணவாக மூன்று வேளை உட்கொள்வது பாதிப்பை ஏற்படுத்தும். நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், உடல் பருமன் மற்றும் பிற நோய்களை ஏற்படுத்தும். உணவு சில நோய்களை குணப்படுத்தும் என சமூக வலைதளங்களில் வரும் விளம்பரங்களை கண்டு ஏமாற வேண்டாம்.

ஒரு குறிப்பிட்ட நோயை உணவின் மூலம் குணப்படுத்த முடியும் என்று கூறினால் முறையான அறிவியல் ஆய்வு நடத்தி, நாட்டின் முக்கிய உணவு அதிகாரியான சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் அனுமதி பெற வேண்டும். ஊட்டச்சத்து, உடல் செயல்பாடு, ஆற்றல் போன்றவை உணவில் இருந்து பெறப்படுவதாகவும் நோய்களை குணப்படுத்த உணவல்ல மருந்தையே பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறினார். (ஐ)

# ரணில் - சஜித் அணிகள் விரைவில் சந்தித்து பேச்சு

கொழும்பு, ஓக. 03

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் சஜித் பிரேமதாஸ அணியினருக்கு இடையே அவசர கலந்துரையாடல் ஒன்று விரைவில் நடைபெறவுள்ளது.

இந்தப் பேச்சில் சஜித் பிரேமதாஸ நேரடியாக பங்கேற்கமாட்டார். அவரின் சார்பில், அவருக்கு நெருக்கமான மூவர் இந்தப் பேச்சில் பங்கேற்பர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பேச்சுக்கு முன்னதாக சஜித் அணியை பிரநிதித்துவப்படுத்தி லக்ஷ்மன் பொன்சேகா, ரணில் அணியிலிருந்து சாகல ரத்நாயக்க ஆகியோர் பல சுற்று பேச்சுகளை நடத்தியுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியில் சரத் பொன்சேகாவின் பங்கு மர்மமாக மாறியுள்ளமை பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. மேலும், லக்ஷ்மன் பொன்சேகாவுக்கம் சரத் பொன்சேகாவுக்கும் இடையிலான நெருங்கிய உறவும் அதிகளவில் பேசப்படுகின்றது.

லக்ஷ்மன் பொன்சேகா, சஜித் பிரேமதாஸவின் பிரசாரசெயல்பாட்டில் முதன்மையானவராகக் கருதப்பட்டிருந்த நிலையில் தற்போது ஐக்கிய தேசிய கட்சியை பழைய நிலையில் உருவாக்க முயற்சிக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 வீதமான குடும்பங்கள் கடனாளிகளாகியுள்ளனர்

## புள்ளிவிவர திணைக்களம்

கொழும்பு, ஓக. 03

**பொருளாதார நெருக்கடியால் நாட்டில் 22 வீதமான குடும்பங்கள் கடனாளிகளாக மாறியுள்ளன என்று சனத்தொகை மற்றும் புள்ளிவிவர திணைக்களம் வெளியிட்ட கணக்காய்வு அறிக்கையில் தெரியவந்துள்ளது.**

அறிக்கையின்படி, அதிக கடன்தொகை வீதம் அடமானங்கள் மூலம் பதிவாகியுள்ளன. 31 வீதமான கடன்கள் அடமானங்கள் மூலம் பெறப்பட்டுள்ளன.

நாட்டில் 22.3 வீதமான குடும்பங்கள் தமது அன்றாட உணவு தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்காகவே கடன்களை பெற்றுள்ளன.

அரச மற்றும் தனியார் வங்கிகளிடமிருந்து 21.9 வீதமும் சமுர்த்தி போன்ற கிராம வங்கிகளிலிருந்து 7.1 வீதமும் பணம் கடன் வழங்குபவர்களிடமிருந்து 9.7 வீதமும் நிதி மற்றும் குத்தகை நிறுவனங்களிலிருந்து 8.7 வீதமும் கடன் பெறப்பட்டுள்ளது.

இதேவேளை, பொருளாதார நடவடிக்கைகளுக்காக 15.7 வீதமும் வீடு கட்டுதல் மற்றும் வீடு பழுது பார்ப்பதற்காக 17 வீதமும் சுகாதார தேவைகளுக்காக 9.9 வீதமும் முந்தைய கடன்களை தீர்ப்பதற்காக 11.9 வீதமும் கடன் பெறப்பட்டுள்ளது.

2020 - 2021ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் அத்தியாவசிய செலவுகளை ஈடுகட்ட அதிகமாகக் கடன் வாங்கப்பட்டதை இந்த தணிக்கை அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

கடனைத் திருப்பிச் செலுத்த இயலாமை, கடனை சார்ந்திருப்பது போன்ற காரணங்களால் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் சவால்கள் எழுந்துள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ)



# இந்தியத் தூதுவருடன் நாமல் எம். பி. சந்திப்பு

கொழும்பு, ஓக. 03

இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம். பிக்கும் இடையே முக்கிய சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இந்த சந்திப்பில், இலங்கையின் சமீபத்திய அரசியல் முன்னேற்றங்கள் குறித்து கருத்துப் பரிமாற்றம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

கோப்பு படம்



# ரணில் - மகிந்த இரகசிய சந்திப்பு

கொழும்பு, ஓக. 03

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே நேற்று முன்தினம் இரவு சந்திப்பு நடைபெற்றதாகத் தெரிய வந்துள்ளது.

கொழும்பு விஜயராமையில் உள்ள மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் இந்த சந்திப்பு நடந்தது.

மூடிய அறைக்குள் நடந்த இந்தச் சந்திப்பு தொடர்பில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து எவையும் வெளிவரவில்லை.

சுமார் ஒரு மணி நேரம் நடந்த இந்த சந்திப்பில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முக்கிய விடயங்கள் பேசப்பட்டன என்று அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# ஜனாதிபதி தேர்தலில் பெரமுன கட்சி வேட்பாளரை களமிறக்குவது நல்லது!

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 03

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான சிறீ லங்கா பொதுஜன ஜனாதிபதி தேர்தலில் தனித்து வேட்பாளரை களமிறக்குவது சிறந்தது. அவர்களுக்கு சரியான பாடத்தை மக்கள் கற்பிப்பார்கள் - இவ்வாறு ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், பொருளாதார பாதிப்புக்கு பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, கோட்டபய ராஜபக்ஷ ஆகியோர் பொறுப்புக் கூறவேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஆகவே, ராஜபக்ஷர்கள் ஆதரவளிக்கும் அரசியல் தரப்புடன் ஒருபோதும் ஒன்றிணையப் போவதில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க போவதில்லை. தமது வேட்பாளரை களமிறக்குவதாக பொதுஜன பெரமுன குறிப்பிட்டுள்ளமை சிறந்ததோர் அரசியல் தீர்மானமாகும். நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளிய ராஜபக்ஷர்களுக்கு நாட்டு மக்கள் இம்முறை தகுந்த பாடத்தை கற்பிப்பார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் நாட்டு மக்கள் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டுக்காக சிறந்த தீர்மானங்களை எடுக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது பற்றி நான் தனிப்பட்ட தீர்மானத்தை எடுக்க முடியாது. கட்சியின் நிறைவேற்றுக் குழுவே அந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும்- என்றார். (ஐ)

# 2025 விடுமுறை வர்த்தமானி வெளியானது!

கொழும்பு, ஓக. 03.

2025 ஆம் ஆண்டிற்கான பொது மற்றும் வங்கி விடுமுறையின் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவால் இந்த வர்த்தமானி அறிவித்தல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தங்கத் தாமரையை விற்க முயன்றவர் கைது!

கொழும்பு, ஓக. 03

தொல்பொருள் பெறுமதி மிக்க தங்கத் தாமரை மலரை விற்பனை செய்ய முயன்றவரை குற்றப் புலனாய்வு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மாத்தளை - அலுவிஹாய பகுதியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார்.

கைதான நபர் தொல்பொருள் மதிப்புமிக்க 706 கிராம் நிறையுடைய - 24 இதழ்கள் கொண்ட தங்கத் தாமரையை 50 இலட்சம் ரூபாய்க்கு விற்க முயன்றபோதே கைது செய்யப்பட்டார்.

கைதானவர் மாத்தளையை சேர்ந்த 33 வயது நபராவார்.

# ஜனாதிபதித் தேர்தலுக்கு பெரும் இடையூறு ஏற்படும்!

## இப்படி எச்சரிக்கிறார் விமல்

கொழும்பு, ஓக. 03

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டே கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளார். பொலிஸ் மா அதிபர் பதவி தொடர்பிலும் நெருக்கடி நிலைமையே நிலவுகிறது. இதற்கு விரைவான தீர்வு கிடைக்காவிட்டால் வேறு யாராவது நபரின் தலையீட்டால் ஜனாதிபதி தேர்தலுக்கு பெரும் இடையூறு ஏற்படும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ எம். பி. கூறியுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதி மிக அவசரமாக கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளார். இந்நிலையில், தான் வேட்பாளர் என்பதால் பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிப்பது பொருத்தமற்றது என்று அவரால் கூற முடியும். எனவே, இந்த விடயத்தில் நெருக்கடிநிலை உருவாகியுள்ளது.

சட்டத்துறை, நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறை என்பன இந்தப் பிரச்னைக்கு விரைவில் தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் ஏதோவொரு தரப்பினரின் அச்சுறுத்தலுக்கு அமைய நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு பெரும் இடையூறு ஏற்படும் - என்றார். (ஐ)

# முதல் 3 மாதத்தில் சுற்றுலா மூலம் 150 கோடி டொலர்கள் வருமானம்!

கொழும்பு, ஓக. 03

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் சுற்றுலாத்துறை வருமானம் 150 கோடி அமெரிக்க டொலர்களாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் இது இருமடங்கு அதிகம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனிடையே, 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் வெளிநாட்டு பணியாளர்களால், இலங்கைக்கு கிடைத்த வருமானம் 314 கோடி அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது. 2023 ஆம் ஆண்டில் 282 கோடி டொலர் வருமானம் கிடைத்திருந்தது.

இந்நிலையில், நாட்டின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு ஜூனில் 570 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2024 ஜூன் மாதம் வரை அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதியும் அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பள்ளிவாசல் நிர்வாகத்தை குழப்பும் ஞானசார தேரர் உள்ளிட்ட குழுவினர்"



கல்முனை, ஓக. 03

**கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தை குழப்பும் முயற்சியில் ஞானசார தேரர் உள்ளிட்ட குழுவினர் திரைமறைவில் செயல்பட்டு வருவதாக அந் தப் பள்ளிவாசல் மற்றும் கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா ஷரீபின் தலைவர் அல்ஹாஜ் எஸ். எம். ஏ அஸீஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

கல்முனையில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் பெயரால் புதிய நிர்வாக சபை சட்டவிரோதமாக செயல்பட முயற்சி செய்கின்றது. இன்று வரை நாங்கள் தான் இந்த கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா ஷரீபின் தலைவர் மற்றும் நம்பிக்கையாளர் சபையினர். புதிய நிர்வாக சபை பதவியேற்றலின் அடாத்தாக எம்மை அச்சுறுத்த வருகின்றார்கள். அவர்களுக்கு எதிராக பொலிஸ் நிலையம் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு முறைப்பாடு செய்துள்ளேன். எமது நிர்வாகம் மீது குற்றச்சாட்டுக்கள், ஊழல் காரணமாக இரு பள்ளிவாசல்களுக்கும் என புதிதாக 22 பேர் கொண்ட நம்பிக்கையாளர் நியமனப் பத்திரத்தை கடந்த 24 ஆம் திகதி முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வழங்கியிருப்பதனை நாம் இதுவரை ஏற்கவில்லை. மக்களும் அவ்வாறான ஒரு கருத்தில் தான் உள்ளனர். இங்கு பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் மற்றும் இதர தரப்பினர் எமது நிர்வாகத்தை குழப்புவதற்கு முயல்கின்றனர். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இவ்வாறான குழப்ப நிலை ஏற்படுவது வீண் சந்தேகத்தை எம் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது- என்றார். (எ)

# உண்மை, நல்லிணக்க பொறிமுறையின் இடைக்கால செயலகத்தின் செயலமர்வு



திருக்கோவில், ஓக. 03

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையின் இடைக்காலச் செயலகத்தின் செயலமர்வு திருக்கோவில் பிரதேச செயலாளர் த. கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி எஸ். நிருபா, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி அனோஜா உஷாந்த், கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ. கந்தசாமி, பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



இதன்போது, பங்கேற்பாளர்கள் தங்கள் எண்ணங்கள் அனுபவங்கள் மற்றும் உண்மை மற்றும் நல்லிணக்க செயல்முறை தொடர்பில் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். (எ)

# பலஸ்தீனத்தின் விடுதலை பாதையை முடக்க முடியாது

## ரிஷாத் எம். பி. தெரிவிப்பு

கல்முனை, ஓக. 03

கோழைத்தனமான தாக்குதல்களால் ஒருபோதும் பலஸ்தீனத்தின் விடுதலை பாதையை முடக்க முடியாது என்று பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

தமது மண்ணுக்கான உரிமை மீட்புப் போராட்டத்தில் நிலைத்து நின்ற பலஸ்தீனத்தின் ஹமாஸ் அரசியல் அமைப்பின் தலைவர் இஸ்மாயில் ஹனியே படுகொலை சம்பவமானது மிலேச்சனத்தின் வெறியர்களின் முகங்களை காட்டுகின்றது. இப்படுகொலைகளை மனிதத்துவம் கொண்ட எவராலும் ஏற்க முடியாது.

ஆக்கிரமிப்பை மட்டும் கொண்டு ஹமாஸ் மக்களையும், சிறுவர்களையும், கர்ப்பவதி பெண்கள் மற்றும் முதியோர்கள் எனப் பாராது கொடூரமான முறையில் கொன்றொழிக்கும் இஸ்ரேலின் இந்தச் செயலை நான் பிரதி நிதித்துவம் செய்யும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வண்மையாகக் கண்டிக்கின்றது.

இலங்கை - பலஸ்தீன உறவு என்பது பல ஆண்டுகள் நெருக்கமானது. இந்த உறவானது எம்மில் இருந்து பிரிக்க முடியாத தொன்று என்பதால் தான் நாம் இழப்புக்களின் வேதனையை உணர்கின்றோம். பலஸ்தீனத்தின் போராட்டம் என்பது உலகளாவிய வல்லரசுகள் கூட நியாயம் கண்டுள்ள நிலையில், இஸ்ரேல் தொடர்ந்து கட்டுக்கடங்காது - காட்டுமிராண்டித்தனமாக மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் அந்த மக்களை மேலும் பல இழப்புக்களுக்குள் தள்ளி வருகின்றது- என்று ரிஷாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# கோணேஸ்வர ஆலய வரலாற்று படிப்பினை வினா விடை போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும்

திருகோணமலை, ஓக. 03

திருகோணமலை பரடைஸ் பாலர் பாடசாலையின் 9ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு திருக்கோணேஸ்வர ஆலய வரலாற்றுப் படிப்பினைகளை இளைய தலைமுறைக்கு ஊடுகடத்தும் நோக்கில் வினா விடைப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் திருகோணமலை ஆர். கே. எம். சிறீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக தென்கயிலை ஆதீன குரு முதல்வரான தவத்திரு அகத்தியர் அடிகளாரும், பிரதம விருந்தினராக, சிவபூமி அறக்கட்டளையின் தலைவர், செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுகனும், சிறப்பு விருந்தினர்களாக, வரலாற்று ஆய்வாளர் என். கே. எஸ். திருச்செல்வம், சட்டத்தரணி உமாகரன் இராசையா, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி லக்ஷ்மிதேவி சிறிதரன் மற்றும் மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (எ)

# அறநெறி பாடசாலை மாணவரின் ஆக்கத்திறன் போட்டி நிகழ்வுகள்

மண்முனை, ஓக. 03

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறனை வெளிக்கொணரும் போட்டிகளில் களுவாஞ்சிக்குடி சைவ மகா சபை அறநெறிப் பாடசாலை மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.



பேச்சாற்றல், கதாப்பிரசங்கம், நீதி நூல் ஒப்புவித்தல், பண்ணிசை, சொல்லாடல் திறன், நாடகம், வில்லிசை, பரதநாட்டியம் ஆகிய அனைத்து பிரிவுகளிலும் தமது திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி பெற்றுள்ளனர்.

அந்தவகையில் சைவ மகா சபை அறநெறிப் பாடசாலையின் இந்த வெற்றிகளுக்கு காரணமான அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், சைவ மகா சபையினர் மற்றும் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம், களுவாஞ்சிக்குடி சரஸ்வதி வித்தியாலயம், களுவாஞ்சிக்குடி விநாயகர் வித்தியாலயம், களுவாஞ்சிக்குடி மாரியம்மன் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் பெற்றோர்கள் மற்றும் சைவ மகா சபை தலைவர் க. மதிசீலன் ஆகியோர் பங்கேற்றனர். (எ)

# தாய் சேய் நேய மருத்துவமனையை உருவாக்க மட்டக்களப்பில் பயிற்சி

மட்டக்களப்பு, ஓக. 03

தாய் சேய் நேய மருத்துவமனைகளை உருவாக்க மற்றும் மேம்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்வு சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணியகத்தின் அனுசரணை மற்றும் வழிகாட்டலில் நடைபெற்றது .

இந்த நிகழ்வு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய கலாநிதி ஆர். முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் மருத்துவர் கே. கிரிசுதன், தாய் சேய் நல மருத்துவ அதிகாரி மற்றும் மருத்துவ மனை பணிப்பாளர்கள், அத்தியட்சகர்கள் மருத்துவ அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் வளவாளராக பங்கேற்று கருத்துரைத்த பேராசிரியர் எம். திருக்குமார், கருத்தரித்து முதல் தடவையாக சிகிச்சை நிலையத்துக்கு வரும் போதே அவர்களுடன் நடந்து கொள்ள வேண்டிய முறை தொடர்பிலும், தாய் சேய் நேய மருத்துவமனைகளில் தொடர் பாடலின் அவசியம் குறித்தும் விளக்கமளித்தார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல்மீது பதில் தாக்குதல்!



டெல் அவிவ், ஓக. 03

**இஸ்ரேல் மீது அதிரடி ரொக்கெட் தாக்குதல் நடத்தியுள்ளது ஹிஸ்புல்லா அமைப்பு. அந்த அமைப்பின் தளபதி புவாத் ஷுகர் என்பவரை இஸ்ரேல் தாக்கிப் படுகொலை செய்த நிலையில் இவ்வாறு பதில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.**

பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா அமைப்பும் இஸ்ரேலை தாக்கி வருகிறது. இந்த நிலையில், இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள கோலன் ஹைட்ஸ் பகுதியில் உதைபந்தாட்ட திடல் ஒன்றில் திடீரென சில நாட்களுக்கு முன்னர் ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டதில், குழந்தைகள் உட்பட 12 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

இதன் தொடர்ச்சியாக, இஸ்ரேல் பதிலடி தாக்குதலில் ஈடுபட்டது. இதில், அடுத்தடுத்து பலர் கொலை செய்யப்பட்டனர். ஹமாஸ் அமைப்பின் தலைவரான இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டார்.

அடுத்து, ஹிஸ்புல்லா அமைப்பின் தளபதி புவாத் ஷுகர் என்பவரை இஸ்ரேல் தாக்கி படுகொலை செய்தது. இதனை தொடர்ந்து அந்தப் பகுதியில் பதற்றம் தொற்றிக் கொண்டது. இந்தச் சூழலில், லெபனான் நாட்டில் இருந்து இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பு அதிரடி தாக்குதலில் ஈடுபட்டுள்ளது. 20இற்கும் மேற்பட்ட ரொக்கெட்களை ஏவியது.

எனினும், இந்த ரொக்கெட்களில் 5 மட்டுமே இஸ்ரேலுக்குள் புகுந்தன. யாருக்கும் பாதிப்பு ஏற்பட்ட தகவல்கள் இல்லை என இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதலுக்கு ஹிஸ்புல்லா அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. இதனால், மத்திய கிழக்கு பகுதியில் பதற்றம் தொடர்கிறது. (எ)



## ஹமாஸ் தலைவரின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்

தெஹ்ரான், ஓக. 02

இஸ்ரேலின் தாக்குதலில் கொல்லப்பட்ட ஹமாஸ் தலைவரின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான ஈரான் மக்கள் கலந்து கொண்டுள்ளனர்.

ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியேயின் உடலுக்கான பிரார்த்தனைகளுக்கு ஈரானின் ஆன்மீகத் தலைவர் ஐயத்துல்லா அலி கமேனி தலைமை தாங்கினார்.

இதேவேளை, ஹமாஸ் தலைவரின் உடல் கட்டார் தலைநகர் டோகாவுக்கு கொண்டு செல்லப்படும் அங்கு இறுதிக்கிரியைகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஹமாஸ் இராணுவ தலைவர் முகமது தெய்ப் உயிரிழப்பு

### இஸ்ரேல் அரசு அறிவிப்பு

காஸா, ஓக. 03

ஹமாஸ் இராணுவத் தலைவர் முகமது தெய்ப் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் அரசு அறிவித்துள்ளது.

ஈரான் புதிய ஜனாதிபதி மசூத் பெஸ்கியன் பதவியேற்பு விழாவில் பங்கேற்பதற்காக ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே, ஈரான் தலைநகர் தெஹ்ரானுக்கு சென்றிருந்தார். பதவியேற்பு விழாவில் பங்கேற்ற பிறகு, விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்தார். அந்த கட்டடத்தின் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் இஸ்மாயில் ஹனியே மற்றும் அவரது பாதுகாவலர் ஆகியோர் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு அடுத்தபடியாக தற்போது ஹமாஸ் இராணுவத் தலைவர் முகமது தெய்ப் கொல்லப்பட்டார் என்ற தகவலை இஸ்ரேல் இராணுவம் வெளியிட்டுள்ளது. இஸ்மாயில் ஹனியே இறுதி ஊர்வலத்துக்காக தெஹ்ரானில் மக்கள் திரண்டிருக்கும் இந்த நேரத்தில் தெய்ப்பும் இறந்துவிட்டார்



என்ற செய்தியை இஸ்ரேல் வெளியிட்டுள்ளது. தெய்ப், ஒக்டோபர் 7 தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டவர் என நம்பப்படுபவர். இந்த நிலையில், ஜூலை 13 ஆம் திகதி இஸ்ரேல் போர் விமானங்கள் தெற்கு காஸாவின் கான் யூனிஸ் பகுதியில் உள்ள முகமது தெய்ப் மற்றும் ஹமாஸின் கான் யூனிஸ் பகுதி படைப்பிரிவின் தளபதி சலாமே ஆகியோரின் இடங்களை தாக்கின. இதில் தெய்ப் உயிரிழந்தார்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் போராளிகள் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி நடத்திய தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட இவரை, தாக்குதல் நடந்த 10ஆவது மாதத்தில் இஸ்ரேல் கொலை செய்தது. (எ)

## அமெரிக்கா - ரஷ்யா இடையே திடீரென கைதிகள் பரிமாற்றம்

வாஷிங்டன், ஓக. 03

அமெரிக்கா, ரஷ்யா இடையே திடீரென கைதிகள் பரிமாற்றம் நடைபெற்றுள்ளது.

அமெரிக்கா, ஜேர்மனி போன்ற மேற்கத்திய நாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே நீண்ட காலமாக மோதல் போக்கு நிலவி வருகிறது. மேற்கத்திய நாடுகளில் உளவு, பயங்கரவாதம் போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக ரஷ்யா, பெலாரசை சேர்ந்த சிலரை அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகள் கைது செய்து சிறையில் அடைத்துள்ளன.

அதேபோன்று, அமெரிக்கா, ஜேர்மனி, போலாந்து, ஸ்லோவேனியா, நோர்வே போன்ற நாடுகளை சேர்ந்தவர்களை ரஷ்யா, பெலாரஸ் கைது செய்து சிறையில் அடைத்துள்ளன.

இந்த நிலையில், பனிப்போர் காலத்துக்கு பின்னர் முதல் முறையாக அமெரிக்கா - ரஷ்யா இடையே கைதிகள் பரிமாறிக் கொள்ளப் பட்டுள்ளனர். அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே கைதிகள் பரிமாற்றம்



நடைபெற்றுள்ளது.

இதன்படி, ரஷ்யா, பெலாரஸ் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த அமெரிக்கா, ஜேர்மனி உட்பட மேற்கத்திய நாடுகளை சேர்ந்த 16 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதற்குப் பதிலாக அமெரிக்கா, ஜேர்மனி சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த ரஷ்யா, பெலாரசை சேர்ந்த 10 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஒட்டுமொத்தமாக 26 கைதிகள் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கைதிகள் பரிமாற்றம் துருக்கி தலைநகர் அங்காராவில் நடைபெற்றுள்ளது.

அமெரிக்காவில் இருந்து விடுதலை செய்யப்பட்ட கைதிகள் துருக்கியில் இருந்து பின்னர் ரஷ்யா திரும்பினர். அவர்களை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் விமான நிலையத்தில் வரவேற்றார். அதேபோன்று ரஷ்யாவில் இருந்து விடுதலை செய்யப்பட்ட கைதிகள் துருக்கியில் இருந்து அமெரிக்கா, ஜேர்மனி சென்றடைந்தனர். விடுதலையான அமெரிக்கர்கள் ஜனாதிபதி ஜோ பைடனை சந்தித்தனர்.

ரஷ்யா, மேற்கத்திய நாடுகளுக்கு இடையேயான பனிப்போருக்கு பிறகு இருதரப்பும் அதிக எண்ணிக்கையிலான கைதிகளை பரிமாற்றிக்கொள்வது இதுவே முதல் முறை. (எ)

## சூடான் இராணுவத் தளபதியின் நிகழ்ச்சியில் ட்ரோன் தாக்குதல்

கார்டோம், ஓக. 03

சூடான் இராணுவத் தளபதி பங்கேற்ற நிகழ்ச்சியில் ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சூடான் இராணுவத்துக்கும், துணை இராணுவப் படைகளுக்கும் இடையே சுமார் ஒரு வருடத்துக்கும் மேலாக போர் நடந்து வருகிறது. இதனால் சூடானின் பல்வேறு பகுதிகளில் பதற்றமான சூழல் நிலவுகி



றது.

இந்த நிலையில், சூடான் இராணுவத் தளபதி அப்தல் பதா புர்கான் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கிழக்கு சூடானில் உள்ள கெபெயிட் நகரில் நடைபெற்ற இராணுவப் பட்டமளிப்பு விழாவின்போது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்ததாக சூடான் இராணுவம் தெரிவித்துள்ளது. (எ)

இஸ்ரேல்மீது பதில் தாக்குதல்

## தனது பிராந்திய சகாக்களை இன்று சந்திக்கிறது ஈரான்

தெஹ்ரான், ஓக. 03

இஸ்ரேலுக்கு எதிரான பதில் தாக்குதல் குறித்து ஆராய்வதற்காக ஈரானின் பிரதிநிதிகள் ஏமன், லெபனானில் உள்ள தங்கள் சகாக்களை சந்திக்கவுள்ளனர்.

ஈரானின் பலஸ்தீன சகாக்களான ஹமாஸ் இஸ்லாமிய ஜிகாத் அமைப்பின் பிரதிநிதிகளையும், ஏமனின் ஹௌத்தி கிளர்ச்சியாளர்களின் பிரதிநிதிகளையும், லெபானின் ஹிஸ்புல்லா மற்றும் ஈராக் கிளர்ச்சியாளர்களையும் ஈரானின் பிரதிநிதிகள் சந்திக்கவுள்ளனர்.

இந்த சந்திப்புகள் குறித்து நன்கறிந்த ஈரான் பிரதிநிதியொருவர் இது குறித்து ரொய்ட்டருக்கு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் ஈரானின் ஆன்மீகத் தலைவர் ஐயத்துல்லா அலி கமேனியும் கலந்துகொள்ளவுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் அமைச்சரவையில் இருக்காவிடின் ஜனாதிபதித் தேர்தலும் நடைபெறாது

## விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 03

**நான் அமைச்சரவையில் இருந்திருக்காவிட்டால் 2024ஆம் ஆண்டிலும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றிருக்காது. அது தொடர்பான தகவல்களை பிறிதொரு சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்துவேன் - இவ்வாறு தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இலங்கை மன்றக் கல்லூரியில் நடந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனைத்து இன தலைவர்களும் ஒன்றுபட்டு ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரத்தை பெற்ற எமது நாடு 1978ஆம் ஆண்டுக்கு பின்னர் அரசியல்வாதிகளின் மோசடிகளால் நாடு வங்குரோத்தடைந்தது. இந்த நிலைக்கு அரசியல்வாதிகளே காரணம். நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு பதிலாக அரசியல்வாதிகள் தங்களை பலப்படுத்தவே நடவடிக்கை எடுத்தார்கள். அதன் பலனாகவே நாடு வங்குரோத்து நிலைக்கு சென்றது.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் புதியதொரு மாற்றத்தை ஏற்படுத்தவே நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தீர்மானித்தேன். நாட்டின் வளங்களை விற்பனை செய்வதே தற்போதுள்ள ஆட்சியாளர்களின் பணியாக இருந்து வருகிறது. நான் ஆட்சிக்குவந்தால் நாட்டு வளங்களில் ஒரு சதமேனும் விற்பனைசெய்ய இடமளிக்கமாட்டேன் என்ற



உறுதியை வழங்குகிறேன். யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த கௌரவம் மகிந்த ராஜபக்ஷ்வுக்கு இருக்கிறது.

அதற்காக 2010இல் அவருக்கு மக்கள் ஆணை வளங்கியது நாட்டை கொள்ளை அடிப்பதற்கு அல்ல. அவர் தனது நெஞ்சில் அடித்துக்கொண்டு முதலாவது தடவையும் இரண்டாம் தடவையும் மூன்றாம் தடவையும் தாய் நாடு என பூமியை முத்தமிட்டுக்கொண்டு நாட்டை அழித்துவிட்டார் - என்றார்.

# சுகாதார துறை அடிப்படை உரிமையாக மாற்றப்படும்!

## சஜித் பிரேமதாஸ உறுதி

கொழும்பு, ஒக. 03

சுகாதார துறையை நாட்டின் அடிப்படை உரிமையாக மாற்றுவதற்கு தேவையான அரசமைப்பு திருத்தத்தை கொண்டு வருவதாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உறுதியளித்துள்ளார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்க பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "அரசமைப்பில் அடிப்படை உரிமைகள் போலவே பொதுக் கொள்கையை வழிநடத்துவதற்கான வழிகாட்டல் மற்றும் அடிப்படை தத்துவ கோட்பாடுகள் காணப்படுகின்றன. எமது நாட்டின் அரசமைப்பில் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளே காணப்படுகின்றன.

"அடிப்படை உரிமைகள் தொடர்பில் நீதிமன்றில் சவால் விடுக்க முடியும் என்றாலும், அரசாங்கத்தின் கொள்கைகளை நிர்வகிக்கும் கோட்பாடுகளை நீதிமன்றத்தின் முன் சவால் விடுக்க முடியாது. எனவே, சுகாதாரத் துறையை நாட்டின் அடிப்படை உரிமையாக மாற்றத் தேவையான அரசமைப்பு திருத்தத்தை கொண்டு வருவேன். இதன் மூலம் பல பிரச்னைகள் தீர்க்கப்படும்.

"220 இலட்சம் பேரினதும் சுகாதார உரிமைகளை பாதுகாக்க கொள்கை வகுப்பாளர்கள் ஒவ்வொரு நொடியும் விழிப்புடன் இருக்க வேண்டும். இதன் மூலம் பல பிரச்னைகள் தீர்க்கப்படும். எனவே, சுகாதாரம் மற்றும் பிற சமூக - பொருளாதார உரிமைகளும் அடிப்படை உரிமைகளாக மாற்றப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம்" - என்றார். (ஐ)

மத்திய கிழக்கில் பதற்றநிலை:

# நிலைமையை எதிர்கொள்ள 3 விசேட குழுக்கள் அமைப்பு

கொழும்பு, ஒக. 03

மத்திய கிழக்கில் நிலவும் பதற்ற நிலை தொடர்ந்தால் அதனை எதிர்கொள்வது தொடர்பில் முன்கூட்டிய தயார் நிலைக்காக மூன்று விசேட குழுக்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த தீர்மானம், மிகவும் சரியானது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும்,மத்திய கிழக்கில் எதிர்பாராத பதற்ற சூழ்நிலை உருவாகும் பட்சத்தில் அதனைச் சமாளிப்பதற்கான தயார் நிலையாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மூன்று விசேட குழுக்களை அமைத்துள்ளார். ஒரு குழு நாட்டின் தேசிய பாதுகாப்பு குறித்தும், மற்றொரு குழு அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வது உள்ளிட்ட பொருளாதார நிலை குறித்தும் செயல்படுகிறது. இரண்டு குழுக்களையும் கண்காணிக்க ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான உயர்மட்ட குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

2022 இல், எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. பல்வேறு காரணங்கள் அதற்கு பங்களித்தன. ரஷ்யா - உக்ரைன் போர் காரணமாக, எரிபொருள் விலை அதிகரித்தது. நிலக்கரி, கோதுமை மா போன்றவற்றின் விலைகளும் அதிகரித்தன. விலைவாசி உயர்வை தாங்க முடியாமல் நாடு நெருக்கடிக்கு தள்ளப்பட்டது. கற்றுக்கொண்ட பாடங்களை கருத்தில்கொண்டு, மீண்டும் அவ்வாறானதொரு நிலை ஏற்படாமல் தடுப்பதற்கான முன் ஆயத்தமாக ஜனாதிபதி இவ்வாறு குழுக்களை நியமிப்பது மிகவும் பொருத்தமானது - என்றார். (ஐ)

# நியாயமான தேர்தலை நடத்த ஒத்துழைப்பு வழங்குங்கள்!

## பவ்ரல் அமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஒக. 03

மக்கள் தங்களின் ஆட்சியாளரை தெரிவு செய்ய இருக்கும் தடைகளை நீக்கி, தேர்தல்கள் ஆணைக்குழு நியாயமான தேர்தல் ஒன்றை நடத்த ஒத்துழைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பவ்ரல் அமைப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் ஜனாதிபதி ரணிலுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில், பல்வேறு நிச்சயமற்ற தன்மைகள் அடிக்கடி எழுந்தபோதும் அரசமைப்பின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதி தேர்தலுக்கு அறிவிப்பு செய்துள்ளது.

தேர்தல் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நீங்கள் தேர்தலில் போட்டியிட ஏற்கனவே கட்டுப்பணம் செலுத்தியுள்ள நிலையில், ஜனாதிபதி தேர்தலை நடத்த எந்த தடையும் ஏற்படாமல் பாதுகாப்பதாக அடிக்கடி தெரிவித்துள்ளீர்கள். அதுதொடர்பில் நாங்கள் நன்றி கூறுகிறோம்.

மாகாணசபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகளை நியமித்துக் கொள்ள மக்களுக்கு 6 வருடங்களுக்கும் அதிக காலம் இடமளிக்கப்படாமல் இருத்தல், உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களை தெரிவுசெய்து கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பம் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை, பல்வேறு நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியில் 5 வருடங்களுக்கு பின்னர் மக்கள் ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்து கொள்வதற்கு இருக்கும் சந்தர்ப்பம் தொடர்பில் தற்போது நிச்சயமற்ற தன்மை எழுந்துள்ளமை. அரசமைப்பு பேரவையில், சபாநாயகரின் அல்லது பேறு தரப்பினரின் குறைபாடு அல்லது அரசமைப்பு பேரவையின் குறைபாட்டால் இந்த நாட்டு மக்களின் வாக்குரிமையை இல்லாமலாக்க செய்வதற்கு யாருக்கும் இடமளிக்காமல் இருப்பது உங்களின் பொறுப்பாகும் - என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# ஜனாதிபதி தேர்தல் குறித்து 153 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, ஒக. 03

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு 153 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பானவை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த முறைப்பாடுகளில், பொது வளங்களை தவறாக பயன்படுத்துதல், முறையற்ற நியமனங்கள் - இடமாற்றங்கள் போன்றவையும் அடங்கும். சகல முறைப்பாடுகள் தொடர்பிலும் விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு உறுதியளித்துள்ளது.

மாறாக, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஒரே ஒரு முறைப்பாடு மட்டுமே கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேநேரம், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் 40 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

# அமைச்சுகளின் செயலர்களுக்கு அழைப்பு!

கொழும்பு, ஒக. 03

அனைத்து அமைச்சுகளின் செயலாளர்களையும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்த சந்திப்பு அடுத்த வாரம் நடைபெறும் என்று தெரிய வருகின்றது. (ஐ)

# இலங்கை வந்த ஐ. எம். எவ். குழு பல தரப்பினரை சந்தித்து பேச்சு

கொழும்பு, ஒக. 03

நாட்டின் சமகால பொருளாதார நிலவரம் மற்றும் மறுசீரமைப்புகளில் அடையப்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் நோக்கில் இலங்கை வந்துள்ள சர்வதேச நாணய நிதிய (ஐ. எம். எவ்.) அதிகாரிகள் குழு, ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை எட்டிய விரிவாக்கப்பட்ட நிதி வசதிச்செயல் திட்டத்தின்கீழ் நாட்டின் பொருளாதாரத்தில் அடையப்பட்டுள்ள சாதக மாற்றங்கள் மற்றும் நாணய நிதியத்தால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவதில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றங்கள் என்பன தொடர்பில் ஆராயும் நோக்கில் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான செயல்திட்டப்பிரதானி பீற்றர் ப்ரூவர் தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் கொழும்பு வந்தனர்.

அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான பிரதிநிதிகள், வர்த்தக அமைப்புகளின் தலைவர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து பேச்சுகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்சேகா...

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார சூழல் குறித்து நாங்கள் விவாதித்தோம்“ என குறிப்பிட்டுள்ளார். (அ)

## பொருளாதார...

2024ஆம் ஆண்டின் முதல்காலாண்டில் வளர்ச்சி விகிதம் 5.34 ஆக காணப்பட்டது எனவும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இக்கட்டான கட்டத்திலிருந்து இலங்கை கத்தி முனையில் மீண்டும் வரும் இந்த தருணத்தில் முன்னெடுக்கப்படும் சீர்திருதங்களின் வேகத்தை தொடர்ந்து பேணுவதும் அனைத்து வேலைதிட்டம் தொடர்பான அர்ப்பணிப்புகளையும் சரியான நேரத்தில் நடைமுறைப்படுத்துவதும் கடினமான முயற்சிகள் மூலம் பெறப்பட்ட பொருளாதார வெற்றிகளை தக்கவைப்பதற்கு அவசியமான விடயம் எனவும் சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது.

நிதி வருவாயை அதிகரிப்பதற்கான முயற்சிகள் அவசியம் என தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியம், 2025 வரவு-செலவுத் திட்டத்தில் பொருத்தமான வருவாய் நடவடிக்கைகள் காணப்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

கடன் நிலைதத்தன்மையை அடைவதற்கும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மீளப்பெறுவதற்கும் எஞ்சியுள்ள நடவடிக்கைகளுக்கு விரைவாக தீர்வை காணவேண்டும் என நாங்கள் இலங்கை அரசாங்கத்தை ஊக்குவிக்கின்றோம் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைகக்கான பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பீற்றர் புரூவர் குறிப்பிட்டார். (அ)

## ஜனாதிபதி...

கிடைக்காவிட்டால் வேறு யாராவது நபரின் தலையீட்டினால் ஜனாதிபதித் தேர்தலுக்கு பெரும் இடையூறு ஏற்படுமென்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி மிக அவசரமாக கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளார். இந்நிலையில், தான் வேட்பாளர் என்பதால் பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிப்பது பொருத்தமற்றது என்று அவரால் கூற முடியும். எனவே, இந்த விடயத்தில் நெருக்கடி நிலை உருவாகியுள்ளது.

சட்டத்துறை, நிர்வாகத் துறை மற்றும் நீதித்துறை என்பன இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் ஏதோவொரு தரப்பினரின் அச்சுறுத்தலுக்கமைய, இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு பெரும் இடையூறு ஏற்படும் - என்றார். (அ)

## மாகாண...

என நேற்று காலை சபாநாயகர் தலைமையில் கூடிய கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக் கின்றது.

ஜனாதிபதித் தேர்தல் நடப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்தச் சட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு வழி செய்யும் விதத்தில் மேற்படி சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு வருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சட்டமூலத்தை நிறைவேற்றுவது என்று சுமந்திரன் எம்.பியுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே பேச்சு நடத்தி முடிவு செய்தமைக்கு அமைய, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தச் சட்டமூலத்தின் மீதான விவாதத்தை இம்மாதம் 22, 23ஆம் திகதிகளில் நடத்தச் சுமந்திரன் எம்.பி. கோரியிருந்தபோதிலும், வேறு முற்கூட்டியே திட்டமிடப்பட்ட விடயங்கள் நாடாளுமன்றத்துக்கு இருப்பதினால், அது அடுத்த மாதம் 6 ஆம் திகதிக்குத் திகதியிடப்பட்டுள்ளது.

## கடல்நீரை...

உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில்.

மீன்பிடி அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சுச் செயலாலர் ஏ.ஸீ.ஏ. நபீல், பாராளுமன்ற உறுப்பினர்களான ஆ.சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன்

அமைச்சர் காதர் மஸ்தான், ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரட்நாயக்க, வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி வந்தன விக்கிரமசிங்க, ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதி சக்காவா, தேசிய நீர்வழங்கல் வடிகால மைப்புச் சபை தலைவர், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், நிறுவ னத் தலைவர்கள், திணைக்களத் தலை வர்கள், உட்பட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

குறித்த கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் கடந்த 2015 ஆம் ஆண்டு வடமராட்சி கிழக்கு மீனவ மக்களின் பல்வேறு எதிர்ப்புக்களுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் பல தாமதங்களுக்கு மத்தியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இதனூடாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர்வழங்கல் வடிகாலமைப்பு பிரிவுக்குட்பட்ட 3 இலட்சம் மக்கள் பயனடைவார்கள் என ஏதிர் பார்க்கப்படுகிறது. (அ)

## அடுத்த...

இலங்கையின் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்க முடியவில்லை என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டிருப்பதால் தற்போது அதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றும், அதனால் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்களை செயல்படுத்தி நாட்டை முன்னேற்ற வேண்டும் என்றும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நற்று நடைபெற்ற இளைஞர் சந்திப்பில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனை தெரிவித்தார்.

“செழிப்பான எதிர்காலத்திற்கான பயணம்” என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பெருமளவான இளைஞர்கள் கலந்துகொண்ட னர்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி, இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை அரசாங்கம் ஒருபோதும் மறக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

நிதிப் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்கம் இவ்வருடம் நிதி ஒதுக்கியுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஆசிரியர் சேவையில் புதியவர்களை இணைத்துக் கொள்வதற்கு அடுத்த வருடம் மேலதிக நிதியை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

சுயதொழிலில் ஈடுபட விரும்பும் இளைஞர்களுக்கு நிவாரணத்துடன் கூடிய கடன் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தில் இணைந்து இளைஞர்கள் முன்னோக்கிச் செல்வதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இளைஞர்கள் எழுப்பிய சில கேள்விகளுக்கு சாதகமான பதில்களை வழங்கிய ஜனாதிபதி அவர்களின் தகவல்களை கேட்டறிந்துகொண்டதோடு சிநேக பூர்வமாக கலந்துரையாடினார்.

இளைஞரொருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, எதிர்காலத்தில் அனுபவத்தைப் பொருட்படுத்தாமல் தனியார் துறை தொழில் வாய்ப்புக்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யுமாறு தனியார் துறையிடம் கோரிக்கை விடுப்பதாகவும் உறுதியளித்தார். (அ)

## தமிழர் இனப்பிரச்னை...

யாழ். நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்று நடைபெற்ற யாழ்.மாவட்ட கல்வி யியலாளர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுடனான சந்திப்பிலேயே ஜனாதிபதி இதனைக் தெரிவித்தார்.

தேர்தல் மேடைகளில் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிவிட்டு அவற்றை நிறைவேற்ற கடன் பெற்றதாலேயே நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் கட்டமைப்பு வீழ்ச்சியடைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதே தவறை மீண்டும் நடக்க அனுமதிக்காமல் புதிய பொருளாதார மற்றும் அரசியல் முறையில் முன்னேறிச் செல்வதற்கு பங்களிப்பது நாட்டிலுள்ள அனைத்து கல்வியியலாளர்கள், தொழில் வல்லுநர்கள், தொழில் முயற்சியாளர்கள் மற்றும் ஏனையவர்களின் பொறுப்பாகும் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

இந்த நாட்டில் இனப்பிரச்னைக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் எனவும், பெரும்பான்மையான சிங்கள, பௌத்த மக்களுக்கும் முதன்மை இடம் கிடைத்தாலும், அனைவரையும் சமமாக நடத்துதல், மற்றும் பாலினச் சமத்துவம் உள்ளிட்ட விடயங்களை இதன்போது கருத்தில் கொள்ள வேண்டும் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அத்துடன், தமிழ் மொழியையும் சிங்கள மொழியையும் ஊக்குவிப்பதற்கான முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எதிர்வரும் காலங்களில் தமிழ் நாட்டில் ஏற்படவிருக்கும் பொருளாதார வளர்ச்சியுடன், மற்றவர்களுக்கு இல்லாத வாய்ப்புகள் தமிழ் பேசும் இலங்கையர்களுக்கு கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க -

“முதலில் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட அளவில் வரி விதிக்க இணக்கம் காணப்பட்ட போதிலும் அதன்பின்னர் வந்த அரசாங்கம் தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையில் வரிகளை குறைத்தது. இது அரசாங்க வருவாய் குறைவதற்கு வழிவகுத்தது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்திலிருந்து விலகி, அந்த தவறை நாம் மீண்டும் செய்ய முடியாது. ஒரு நாடாக நாம் முன்னேறும்போது, நமது அரசியல் முறைமையையும் மாற்ற வேண்டும்.

கடந்த பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டின் பிரதமர் பதவியை ஏற்க எவரும் தயாராக இருக்கவில்லை. நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் திறன் கொண்ட ஒருவரைக் கண்டுபிடிப்பதில் சிக்கல் ஏற்பட்டது. ஜனாதிபதி வெளியேறிய பின்னர், நான் பதவி விலகுவதாகச் சொன்னேன். ஆனால் யாரும் பொறுப்பை ஏற்க விரும்பவில்லை. நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப்பானது கடன் வாங்குதல் மற்றும் போலி வாக்குறுதிகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தது என்பது அப்போது புரிந்தது.

நமது அரசியல் முறைமையைக் கருத்தில் கொண்டு வலுவான தீர்மானங்களை எடுக்க வேண்டும். நல்ல எதிர்காலத்திற்காக நாட்டுக்கு புதிய அரசியல் முறைமையொன்று தேவை. அந்த அரசியல் முறைமையை தலைமைத்துவத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தக் கூடாது. பொறுப்பை ஏற்கக்கூடிய தைரியமான தலைவர்களே நாட்டுக்குத் தேவைப்படுகின்றனர். அத்தோடு இந்த பயணத்தை நாம் அனைவரும் ஒன்றாக செல்ல வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் எனவும், பெரும்பான்மையான சிங்கள, பௌத்த மக்களுக்கும் முதன்மை இடம் கிடைத்தாலும், அனைவரையும் சமமாக நடத்துதல், மற்றும் பாலினச் சமத்துவம் உள்ளிட்ட விடயங்களை இதன்போது கருத்தில் கொள்ள வேண்டும் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அத்துடன் சிங்கள, தமிழ் இனப்பிரச்னைக்கு விரைவில் தீர்வு காண வேண்டும். பெரும்பான்மையான சிங்கள, பௌத்த மக்கள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தாலும், அனைவரையும் சமமாக நடத்துவது மிகவும் அவசியம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இதில் இன மற்றும் மத குழுக்களிடையே சமத்துவம் மற்றும் பெண்கள் மற்றும் ஆண்கள் இடையே சமத்துவம் உள்ளது.

நாட்டில் ஒருபாதியாக இருக்கும் பெண்களுக்கு பாராளுமன்றத்தில் சரியான பிரதிநிதித்துவம் இல்லை. இதற்கு நாம் தீர்வு காண வேண்டும். சிங்கள மொழியையும் தமிழ் மொழியை யும் நாம் ஊக்குவிக்க வேண்டும். எதிர்காலத்தில் தமிழகத்தில் ஏற்படப் போகும் பொருளாதார வளர்ச்சியால் தமிழ் பேசும் இலங்கையர்களுக்கு மற்றவர்களுக்கு கிடைக்காத வாய்ப்புகள் கிடைக்கும். - என்றார் ஜனாதிபதி

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், இராஜாங்க அமைச்சர்களான கலாநிதி சுரேன் ராகவன், காதர் மஸ்த ான், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

## இலங்கைக்கு...

எனவும் தூதுவர் குறிப்பிட்டார்.

எங்கள் இரு நாடுகளினதும் இராணுவத்தினர் இடையிலான உறவுகள் காலத்தால் சோதிக்கப்பட்டவை என சீன தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மரபுசார் மரபுசாராத அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றது என தெரிவித்துள்ள சீனத் தூதுவர், எப்போதும் போல இலங்கையின் இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு என்பவற்றை பாதுகாப்பதற்கு இலங்கையின் ஆயுதப் படையினருக்கும் மக்களுக்கும் சீன மக்களும் இராணுவத்தினரும் உறுதியான ஆதரவை வழங்குவார்கள் என கூறினார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில், உயர் மட்ட வருகைகள், உபகரண ஒத்துழைப்பு, பணியாளர்கள் பயிற்சி மற்றும் கடல்சார் பாதுகாப்பு போன்ற துறைகளில் நமது இரு ஆயுதப் படைகளுக்கும் இடையிலான பரிமாற்றங்களும் ஒத்துழைப்பும் ஆழமடைந்து வருகின்றன என சீன தூதுவர் தெரிவித்தார். (அ)

## யாழ்ப்பாணத்தில்...

நன்னீராக்கும் திட்டத்தை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கில் அதி பெறுமதி கூடிய திட்டம் இது. யாழ்ப்பாணத்திற்கான ஆற்றுநீர்த் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படும் . இதனால் யாழ்ப்பாணத்தின் குடிதண்ணீர் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். இதன் மூலம் வடமராட்சி பிரதேசம் செழிப்புறும். தற்போதைய கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தில் மின்சாரச் செலவீனம் அதிகரிப்பதால் நீரின் பெறுமதி அதிகம். இதனால் சூரிய மின் சக்தியை பயன்படுத்தி உற்பத்திச் செலவீனத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தாளையடி கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்திற்கு உதவியளித்த ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் நன்றி-என்றார்.

அத்துடன் தாளையடி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தாளையடிக்கான கிராம சேவகர் பிரிவை உடனடியாக செயற்படுத்துமாறும் உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஜனாதிபதி தேர்தலில் நிச்சயம் வெல்வோம்!

## அடித்துச் சொல்கிறார் ஜோன்ஸ்டன்

கொழும்பு, ஒக. 03

**"மொட்டு கட்சியின் இருப்பு என்பது மகிந்த ராஜபக்ஷவிடம் தான் தங்கியுள்ளது. எனவே, எவர் கட்சியை விட்டு வெளியேறினாலும் கட்சி வீழ்ச்சியடையாது. ஜனாதிபதி தேர்தலில் நிச்சயம் வெல்வோம்." - என்று பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார்.**

மொட்டு கட்சியின் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ள விவகாரம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

மகிந்த ராஜபக்ஷவின் படத்தை பயன்படுத்தி பாராளுமன்றம் வந்தவர்களே கட்சி முடிவுக்கு எதிராக செயற்படுகின்றனர். அவர்கள் அவ்வாறு செயற்பட்டாலும் மக்களும், கட்சி ஆதரவாளர்களும் கட்சியுடன்தான் நிற்கின்றனர்.

மகிந்த ராஜபக்ஷவிடம்தான் கட்சி இருப்பு உள்ளது. எனவே, யார் வெளியேறினாலும் கட்சி விழாது. சிலர் அரசியல் நாடகங்களை அரங்கேற்றுகின்றனர். அது விரைவில் தெரியவரும்.

ஜனாதிபதித் தேர்தலில் நாம் தான் வெல்வோம். புதிய வாக்குகளைப் பெறக்கூடிய வேட்பாளர் எமது வசமே உள்ளார். ஏனைய வேட்பாளர்களுக்கு புதிய வாக்காளர்களின் வாக்குகளைப் பெற முடியாது - என்றார். (அ)

## விஜயதாஸவுக்கு கௌரவம்



கொழும்பு, ஒக. 03

சர்வமத தலைவர்களினால் முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதையிட்டு தனது முதலாவது பிரசாரக் கூட்டத்தை கொழும்பில் உள்ள சட்டமன்ற கல்லூரியில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்திருந்தார்.

இதன்போதே சர்வமதத் தலைவர்களான பாபு சர்மா, கலஹமே தம்மரன்சி தேரர், மௌலவி முசாமில், அருட்தந்தை சுரேன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# செப்ரெம்பர் முதல் ஓய்வூதியர்களுக்கு இடைக்கால கொடுப்பனவாக 3000 ரூபா

கொழும்பு, ஒக. 03

அரச சேவையில் அனைத்து ஓய்வூதியர்களுக்கும் தற்போது வழங்கப்படும் 2500 ரூபா கொடுப்பனவுக்கு 3000 ரூபாவும் சேர்த்த, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் மொத்தம் 5500 ரூபா இடைக்கால கொடுப்பனவாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அரச ஊழியர் சம்பளத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை கவனமாக பரிசீலித்து தொடர்புடைய எதிர்கால திருத்தங்களைச் செய்வதற்கு அதிமேதகு ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் படி, யு. ஆர். செனவிரத்ன தலைமையில் நிபுணர் குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டதாகவும், மீளாய்வுகளின் அடிப்படையில் 2025ஆம் ஆண்டு முதல் திருத்தப்பட்ட சம்பளக் கட்டமைப்பை அமுல்படுத்தும் வரை ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு இந்த இடைக்கால கொடுப்பனவை வழங்கவுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

அரச ஓய்வூதியர்களின் தற்போது சுமார் 7 இலட்சமனோர் ஓய்வூதியம் பெற்று வருவதாகவும், அதற்கமைவாக 2024 ஆம் ஆண்டில் இந்த இடைக்கால கொடுப்பனவை வழங்குவதற்கான அரசாங்கம் 8.4 பில்லியன் ரூபா மேலதிக செலவீனத்தை சுமக்க நேரிடும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கடன் நிர்வகிப்பதில் சவால்கள் இருந்தபோதிலும் ஓய்வுபெற்ற அரச ஊழியர்கள் தற்போது எதிர்நோக்கும் நிதி நெருக்கடிகளை கருத்தில் கொண்டு அரசாங்கம் வழங்கும் விரைவான குறுகிய கால தீர்வாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, அமைச்சர் சியம்பலாபிட்டிய மற்றும் அரச ஓய்வூதியர்களின் கூட்டு தேசிய அமைப்பின் அதிகாரிகளுக்கு இடையில் நேற்றுக் காலை விசேட சந்திப்பொன்று இடம்பெற்றதுடன், ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்கி மூத்த பிரஜைகளின் வட்டி வீதத்தை அதிகரிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (அ)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக. 03

செம்மணி பகுதியில் கஞ்சா போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டார்.



யாழ். வளைவுக்கு அருகில் இளைஞர் ஒருவர் சந்தே கத்துக்கு இடமான முறையில் காணப்படுவதாக பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த அதிரடிப் படையினர் இளைஞரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், வவுனியா பகுதியைச் சேர்ந்தவர் எனவும், அவரிடம் இருந்து 20 கிலோ 175 கிராம் கஞ்சா மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இளைஞனை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் அதிரடி படையினர் ஒப்படைத்துள்ளனர். (அ)

# காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்துக்கு எதிரான மனுக்கள் ஒக். 14 பரிசீலனைக்கு!

கொழும்பு, ஒக. 03

மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தின் நிர்மாணிப்பணிகளை அதானி நிறுவனத்திற்கு வழங்குவதற்கு எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை வலுவிழக்கச்செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட 5 அடிப்படை உரிமை மனுக்களை எதிர்வரும் ஒக்ரோபர் 14ஆம் திகதி விடயங்களை ஆராய்வதற்காக எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

எஸ். துரைராஜா, ஏ.எச்.எம்.டி. நவாஸ், ஷிரான் குணரத்ன, அச்சல வெங்கப்புலி ஆகிய நீதியரசர்கள் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் உள்ளிட்ட சமூக அமைப்புகளால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப் பட்டிருந்தன.

மத்திய ஆசிய பறவைகள் பாதையின் தென்திசையிலுள்ள பறவைகளின் தங்குமிடமான இலங்கை, புலம்பெயர் பறவைகளின் கேந்திர நிலையமாக காணப்படுவதாக மனுதாரர்கள் தமது மனுவில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சுமார் ஒரு மில்லியன் வரையான பறவைகள் குளிர்காலத்தின் போது இந்த பகுதிக்கு வருகை தருவதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பறவைகளின் பாதையில் ஏதேனும் இடையூறு ஏற்பட்டால், புலம்பெயர் பறவைகளின் செயற்பாடுகளுக்கு குறிப்பிடத்தக்க பாதிப்பு ஏற்படுமென மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காற்றாலைத் திட்டத்துக்கு அரசியல், வெளிப்புற காரணிகளின் அடிப்படையில் மன்னார் தீவு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த தீவை தெரிவு செய்வதற்கு விஞ்ஞான ரீதியான அல்லது வேறு எவ்வித விசேட காரணங்களும் இல்லை எனவும் குறித்த நிலப்பரப்பு மிகவும் உணர்திறன் மிக்க சுற்றுச்சூழல் பகுதி என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கொழும்பு துறைமுகத்தில் இந்திய நீர்மூழ்கிக் கப்பல்



கொழும்பு, ஒக. 03

இந்திய கடற்படைக்கு சொந்தமான 'ஐ.என்.எஸ் சல்கி' நீர்மூழ்கிக் கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

நேற்றுக் காலை வருகை தந்த கப்பலை இலங்கை கடற்படையினர் சம்பிரதாயபூர்வமாக வரவேற்றனர்.

64.4 மீட்டர் நீளமுடைய 'ஐ.என்.எஸ் சல்கி' கப்பலில் 40 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

'ஐ.என்.எஸ் சல்கி' கட்டளைத் தளபதி ராகுல் பட்டநாய்க் மற்றும் மேற்கு கடற்படை கட்டளைத்தளபதி சிந்தக குமாரசிங்க ஆகியோருக்கு இடையே உத்தியோகபூர்வ சந்திப்பொன்று நேற்று கடற்படை தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்த கப்பல் எதிர்வரும் 4ஆம் திகதி நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளது. (அ)

# 3 மில்லியன் முட்டைகள் இறக்குமதி!

கொழும்பு, ஒக. 03

எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை 3 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

முட்டை விலை அதிகரிப்பு காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இம்மாதம் முதல் முட்டைகளை இறக்குமதி செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் முட்டையொன்றை 38 அல்லது 40 ரூபாவிற்கு விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

உள்ளூர் சந்தையில் முட்டை விலையை ஸ்திரப்படுத்தும் நோக்கில் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன், கேக் மற்றும் பேக்கரி தொழிலுக்குத் தேவையான முட்டைகளை விநியோகிக்கும் வகையிலும் முட்டைகளை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ... றேவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் ... அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org